முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | 25-10-57 வெள்ளி | ஒலி 27

துரோணரின் துரோகம்!

கற்பனை உரையாடல்

காட்சி: 1.

[அஸ்திஞபுரத்திலுள்ள ஒரு பயிற்சி நிலையம். இருபது—இருபத்திரண்டு வயதுள்ள அர்ச்சுனன், பீமன், துரியோதனன் முதலிய அரசகுமாரர்கள் வில், அம்புகளுடன் நிற்கிருர்கள். அவர்களுக்கு முன்ஞல் கயிற்றினுல் கட்டி விடப்பட்ட பறங்கிப்பழம் தொங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கப்பால் துரோணர் நாற்காலிமீது அமர்ந்திருக்கிருர்.]

துரோணர்: எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களல்லவா?

எல்லோரும்: ஓ! பார்த்துக் கொண்டிருக்கிருேம்!

துரோணர்: எதை?

பீமன்: கயிற்றிலே ஒரு பறங்கிப் பழம் தொங்கிக் கொண்டிருப்பதை!

துரோணர்: நான்கு மாதங்களாக இந்தப் பயிற்சி செய்கிறீர்கள்! அம்பு, பறங்கிப் பழத்தைத் தொட்டு விட்டு விழுந்து விட வேண்டும்! சிறிதுகூடத் துளைக்கக் கூடாது!

பீமன்: அடேயப்பா...!

அர்ச்சுனன்: இதையும் 'கதை வீசுவது' என்று நினைத்துக் கொண்டாயா என்ன?

பீமன்: 'கதை' வீசத் தெரியாதவர்கள்...ஏன், தூக்கத் தெரியாதவர்கள் — இயலாதவர்கள்—கதை பேச வந்து விடுகிருர்கள்— இந்த மெலிந்த வில்லை எடுத்துக் கொண்டு...! இதில் ஏதாவது நம்முடைய பலத்திற்கு வேலை இருக்கிறதா?..

துரோணர்: சண்டை வேண்டாம்! ......தயாராகுங்கள்! பீமன்! நீ முதலில் அம்பை விடு!

[பீமன் அம்பை விடுகிருன். அந்த அம்பு பறங்கிப் பழத்தைத் துளைத்துக் கொண்டு அப்பால் போய் விழுகிறது. எல்லோரும் சிரிக்கிருர்கள்.]

துரியோதனன்: வெளுத்துக் கட்டி விட்டாயப்பா!

பீமன்: சரி; நீ விடப்பா!

துரோணர்: துரியோதனன்! இப்பொழுது நீ விடு! (துரியோதனனுடைய அம்பு பறங்கிப் பழத்தைத் துளைத்துக் கொண்டு வெளியே வருகிறது.)

துரோணர்: சரி! அர்ச்சுனன்! நீதான் உன் அம்பை விடு!

[அர்ச்சுனன் அம்பு பறங்கிப் பழத்தைத் தொட்டு அதிலேயே தொங்குகிறது. எல்லோரும் கை தட்டுகிருர்கள்.]

துரோணர்: சபாஷ், அர்ச்சுனன்! அவ்வளவுதான்! ஆனல் அம்பு பழத்தில் பதியக்கூடாது! தொட்டுவிட்டு விழுந்து விட வேண்டும்! இருந்தாலும் என்னுடைய அர்ச்சுனன் உலகிலேயே சிறந்த "வில்வேந்தன்" ஆகப் போகிருன்! என் பெயரைக் காப்பாற்றுவான்! ஆனல் இன்னும் ஆந்தாறு மாதம் பயிற்சி பெற வேண்டும்!

அர்ச்சுனன்: மிகவும் கடினம் தான்...

துரோணர்: அப்படித்தான் கடினமாக இருக்கும். நல்லது யுதிஷ்டிர, நீ உன் அம்பை விடு பார்க்கலாம்!

[அப்போது ஏகலவ்யன் தயங்கிக் கொண்டே உள்ளே வருகிருன்.]

பீமன்: அட, இது யாரப்பா இது? கருப்பு பூதம் வந்திருக்கிறது! இவர் எந்த தேசத்து அரசகுமாரரோ?

[எல்லோரும் சிரிக்கிருர்கள். ஏகலவ்யன் பயபக்தியோடு துரோணர் காலடியில் குனிகிருன். பாதங்களைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொள்கிருன்! துரோணர் ஆசிர்வாதம் செய்கிருர்.]

துரோணர்: அப்பா! நீ யார்?

ஏகலவ்யன்: தேவ்! நான் பீல் இனத்தவர்களின் தலைவனுகிய 'சர்தாரி'ன் மகன். என் பெயர் ஏகலவ்யன்.

துரோணர்: சரி! இங்கு வரக் காரணம் என்ன?

ஏகலவ்யன்: தங்களை தரிசிக்கவே வந்தேன்! மேலும்...

துரோணர்: மேலும் என்ன? ஒளிக்காமல் கூறு!

[ஏகலவ்யன் கூறத் தயங்குகிருன். மற்ற அரசகுமாரர்கள் வெறுப்போடு அவனை நோக்குகிருர்கள். துரியோதனன் துரோணரை விரைவில் வேறு பயிற்சி கற்பிக்க வேண்டுகிருன்.]

துரோணர்: பயப்படாமல் கூறு!

ஏகலவ்யன்: நான் தங்களின் தொண்டனுக விரும்புகிறேன். எனக்கும் வில் வித்தை...

துரோணர்: நீ வில் வித்தை கற்க விரும்புகிருயா? ஆனல் இது எப்படி......

துரியோதனன்: இது எப்படி முடியும்? பீல் இனத்தவர் வில் வித்தை கற்பதா? வில்வித்தை ஒரு வேதமில்லையா?

துட்சாதனன்: இவன் மூளையைப் பாரு! அரசகுமாரர்களிடையே வில் வித்தை கற்க வந்து விட்டான்! இங்கிருந்து ஓடிப் போய்விடு!...

பீமன்: காட்டு மிராண்டி! வந்து விட்டான் வில் வித்தைக் கற்க!

துரோணர்: பீமா! மிகவும் ஆத்திரப்படாதே! அவனுடைய பக்தியைப் பார்!

யுதிஸ்டிரன்: அவனும் மனிதன் தானே! ஏன் அவனை இப்படி வெறுக்கிறீர்கள்?

துரியோதனன்: ஆனல், குருதேவ்! இந்தக் காட்டு மிராண்டி சுத்த ஆரிய அரசகுமாரர்களுடன் பாடம் கற்பதா?

துரோணர்: ஆனல்...

கர்ணன்: குருதேவ்! தர்மம் தர்மம்தான்! சாஸ்திரத்தின் விதிகளைத் தாங்களும் அறிவீர்கள்!

துரோணர்: ஆமாம்! அப்படியானல் சரிதான். (சிந்தித்து விட்டு) ஏகலவ்யா! தர்மத்தின் விதிகளும் சமூகத்தின் நியதிகளும் கடுமையாக இருக்கின்றன! மிகவும் கொடுமையானதுகூட! நான் உன்னை மாணவனுக ஏற்றுக் கொள்ள இயலாது!

ஏகலவ்யன்: என்ன? தாங்களும் அவைகளை நம்புகிறீர்களா?

துரோணர்: நானும் சமூகத்தின் ஓர் அங்கம்தானே! முடியாது! நான் உனக்கு வில் வித்தை கற்றுத் தர இயலாது! நீ போகலாம்!

ஏகலவ்யன்: முடியாது! குருஜீ! தாங்கள் என்னைத் தங்களின் காலடியில் வைத்துக் கொள்ளுங்கள்! தாங்கள் எனக்கு ஒன்றும் கற்றுத் தர வேண்டாம்! தங்களின் காலடியில் இருக்க அனுமதி தாருங்கள்!

பீமன்: அதுதான் சொல்லிவிட்டாரே...சொல்லிக் கொடுக்க முடியாதென்று!...பிறகு ஏன் நிற்கிருய்? டேய், காட்டு மிராண்டி! வெளியே போடா!

துரியோதனன்: ஆனல் இவன் எப்படி உள்ளே வந்தான்? காவலாளி! இவனை வெளியே தள்ளு!

துரோணர்: (திரும்பி) இல்லை!... ...இல்லை! இது என்ன துரியோதனன்? ஏகலவ்யா! நீ போய் வா! வேறு யாரிடமாவது கற்றுக் கொள்! நானே பிராமணன்!.....ராஜகுரு!..... நீ போய் வா!...

ஏகலவ்யன்: அப்படியானல் நான் போகட்டுமா?...

துரோணர்: ஆம்; சென்று வா! இந்த வித்தை உயர்ந்த சாதிக்காரர்கள் கற்க வேண்டிய வித்தை! நீ போய் வா!...

ஏகலவ்யன்: நல்லது!...[ஏகலவ்யன் துரோணரை வணங்கி விட்டு மெதுவாக வெளியே சென்று மறைகிருன்.]

துரோணர்: போ! போ! ஆனல் இன்று எப்படி உயர்வு தாழ்வு பேசுபவர்கள் வாசலிலிருந்து கல்வி தானம் கேட்டு வெறுங் கையுடன் திரும்பிச் செல்கிருயோ, அதேபோல் இந்த உயர்ந்த சாதிக்காரர்களும் ஒரு நாள் கல்வி கற்க இயலாது தவிக்கத்தான் போகிருர்கள்! காலம் என்றாவது மாருமலிருக்குமா?

துரியோதனன்: குருஜீ, சொல்லுங்கள்! இன்றைய் பயிற்சியை இன்னும் முடிக்கவில்லையே!

காட்சி: 2

[பீல் சர்தாரும், ஏகலவ்யனும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.]

சர்தார்: நான்தான் முன்பே கூறினேனே!...சரி, இப்பொழுது என்ன செய்யப் போகிருய்?

ஏகலவ்யன்: ஆனல் துரோணருக்குக் கற்றுக் கொடுக்க விருப்பம்தான்; ஆனல் அரசகுமாரர்கள் அவரை அனுமதிக்கவில்லை!

சர்தார்: அட! எல்லோரும் ஒரே இனத்தவர்கள்தானப்பா! அவர்கள் கற்றுக் கொடுக்கமாட்டார்கள்! நம்மை முன்னேறவிட்டால்... அது அவர்களுக்கு ஆபத்து தானே!

ஏகலவ்யன்: சரி; அப்படியானல் இருக்கட்டும்! இப்பொழுது நானே வில் வித்தை கற்றுக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன்! தெற்கே உள்ள மைதானத்தில் குடிசை போட்டுக் கொண்டு அங்கேயே பயிற்சி செய்யப் போகிறேன்!

சர்தார்: உனக்குக் கற்பிப்பர் யாரப்பா?

ஏகலவ்யன்: அதே குருநாதர்! எனக்கு அவருடைய ஆசிர்வாதம் கிடைத்துவிட்டது! அவருடைய உருவம் என் உள்ளத்திலே இருக்கும்! அதே எனக்கு வழிகாட்டும்!

சர்தார்: அடே! முட்டாள் பையனே! உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?

ஏகலவ்யன்: ஆமாம் அப்பா! பைத்தியமென்றே வைத்துக் கொள்ளுங்களேன்! பைத்தியமாகாமல் ஒரு செயலும் நடைபெறுவதில்லை! நல்லது; நான் வருகிறேன்! நீங்களும் உலவ வரும்பொழுது அந்தப் பக்கம் வந்து போங்கள்!

சர்தார்: (ஆகாயத்தைப் பார்த்து) அட! கடவுளே இந்தக் குழந்தையை ஏன் என் வீட்டுக்கு அனுப்பினுய்

[தொடர்ச்சி பக்கம்—10

காகித விலையேற்றத்தைக் கருதி
நவம்பர் 1உ இதழ் முதல்
'முரசொலி'யின் விலை
16 புதுக் காசு



வெள்ளி 25—10—57 சென்னை

பாடம் பெறுக!

இருமுறை தமிழர்களால் இரும்படிகள் வாங்கிய இந்தி மொழி இப்போது மூன்றாவது முறையாக தன்னுடைய முற்றுகைக்கான வழி வகைகளை ஆராய்ந்து; படை திரட்டி; அதற்கென மொழி உணர்ச்சி யற்ற மனிதப் பதர்களின் ஒத்துழைப்பையும் தேடிக் கொண்டிருக் கிறது.

இந்த உபகண்டத்தில் வேறெந்த மாநிலத்திலும் இவ்வளவு எதிர்ப்பில்லை இந்திக்கு!

வங்க மாநிலம் தாய்மொழிப் பற்றுக்குப் பெயர் பெற்ற மாநிலம். சொல்லப்போனால் வங்காளிகள் கந்தகக் கிடங்கு போன்றவர்கள்; சிறு பொறிபட்டாலும் வெடித்துச் சீறும் பண்பு கொண்டவர்கள். மொழிக் கமிஷனின் அறிக்கை கண்டு தமிழகம் போலவே அவர் களும் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

சென்ற கிழமை 'அகில இந்திய மொழிப் பிரச்சார நிறுவனம்' இதுபற்றி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மொழிக் கமிஷனின் கருத்தை வன்மையாகக் கண்டித்திருக்கிறது:

"மொழிக் கமிஷனின் இத்தகைய சிபார்சைத் திணிக்க முயன்றால், வட்டார மொழி கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நாளடைவில் இப் போதுள்ள தரத்தையும் இழந்துவிடும் என்பதுடன், வட்டார மக்கள் தற்குறிகளாக மாறும் நிலையும் ஏற்பட நேரிடும்!"

—இத்தகைய வன்மையான கண்டிப்புத் தீர்மானத்தை அந்த நிறுவனம் நிறைவேற்றியிருக்கிறது.

—இருந்தாலும் வங்கத்திலே இந்தி மொழி பள்ளிகளிலே கட் டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது!

பஞ்சாபிலும் இந்திக்கு ஆதரவில்லை. அதனால்தான் அங்கே வெறியர்கள் ஒன்றுகூடி **"இந்தியைக் காப்பாற்று"** என்கிற கோஷத்தோடு ஒரு இயக்கத்தையே நடத்தி வருகிறார்கள். அதற்குப் பிற மாநிலங்களில் உள்ள இந்தி வெறியர்களும் தாராளமாக நிதி உதவி செய்து வருகின்றார்கள்.

உதாரணமாக பம்பாய் மாநில "ஆரிய பிரதிநிதி சபா" அந்த வீண் வம்புக் கிளர்ச்சிக்காக ரூ. **1,11,111** கொண்ட பண முடிப் பினை வழங்கியிருக்கிறது!

—இவ்வளவு நடைபெறும் பஞ்சாப் பள்ளிகளிலே இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது!

இந்தி வெறியர்கள் இவ்வளவு மதி நுட்பத்துடன் திட்டமிட்டு பணியாற்றிவரும் இந்த நேரத்தில் இந்தி கட்டாயமாக்கப்படாத ஒரே மாநிலமாக இருப்பது தமிழ்நாடுதான்!

இங்கு தமிழர்கள் பொங்கி எழுந்து நடத்திய இரு போராட்டங் கள்தான் இந்தி வெள்ளம் தமிழ்ச் சிறார்களைக் கொள்ளை கொண்டு போகாவண்ணம் அணை போட்டுத் தடுத்து வந்திருக்கிறது!

எனினும் இந்த நிலை கண்டு இந்தி வெறியர்கள் தங்கள் தோல் விக்குப் பின்னும் வாளாவிருப்பதாகத் தெரியவில்லை. மீண்டும் இந்தி என்னும் மந்தி ரூபவதியை அதிரூபவதியாக அலங்காரம் செய்து இழுத்துவரும் பணியினைத்தான் மேற்கொண்டிருக்கின்றனர்.

அதனால்தான் இந்தித் திணிப்பையே மூலக் கொள்கையாகக் கொண்டிருக்கும் மத்திய அரசாங்கம் உயர்நிலைப் பள்ளிகளில் உட னடியாக இந்தியைக் கட்டாயப்பாடமாக்க வேண்டுமென்று தாக்கீது பிறப்பித்திருக்கிறது, சென்னை மாநில அரசாங்கத்திற்கு!

இருமுறை இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்க முயன்று தமிழக மாந்தரின் ஒருமித்த எதிர்ப்பால் முகத்திலே கரிபூசப் பெற் றிருக்கிறது, சென்னை ஆட்சி!

அந்த இருமுறையும் காங்கிரஸ் கட்சிதான் பதவியிலிருந்தாலும் பதவி வகித்த பிரமுகர்கள் வெவ்வேறாக இருந்திருக்கின்றனர்.

இந்த முறை பதவியிலிருக்கும் 'பச்சைத் தமிழ'ரும்; அவர் தம் குழுவினரும் சென்ற அரசு பெற்ற அனுபவத்தைப் பாடமாகப் பெற்று தங்கள் கொள்கையை வகுத்துக் கொள்ளப் போகிறார்களா; அல்லது புது அனுபவம் பெற்று; தமிழர்களை மறுபடியும் சோதனைக்கு உள்ளாக்கப் போகிறார்களா—என்பது இன்னமும் தெளிவாக்கப்படா மலேயே இருந்து வருகிறது.

ஆனால் நடந்துவரும் துரைத்தனம் இதுவரை எந்த விதத்தி லும் துணிவான துரைத்தனம் என்று பெயர் வாங்கவில்லை. நாட்டு—இன—மொழிப் பற்றுகள் அற்ற; முதுகெலும்பில்லாதவர்களாகவும்; டில்லியிலிருப்பவர்கள் குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும் குள்ள மனப்பான்மை கொண்டவர்களாகவும்தான் இருந்துவந்திருக்கிறார்கள்.

மத்திய அரசில் உள்ள எஜமானர்களிடம் உரக்கப் பேசி; உள்ளதைக் கூறி; உறுதியை நிலைநிறுத்தி ஒரு ரூபாயாவது அதிகம் பெற்றார்கள் இல்லை, அதிகம் பேசுகின்ற இந்த அமைச்சர்கள்!

தமிழர் எல்லை பறிபோனபோது; குழந்தையைப் பறிகொடுத்த தாயைப்போல் தமிழ் நாட்டவர் குமுறி அழுத வேளையில் வழக்கம்போல கோட்டைக்குள்ளே 'அடிமைப் பள்ளு' பாடிக் கொண்டிருந்தவர்கள்தான், இவர்கள்!

பெற்ற குழந்தைக்குப் பிரியம்போல் பெயர் வைக்கிறான், தகப் பன். ஆனால் சுயமரியாதை இழந்த இவர்களோ சொந்த மாநில மாம் சென்னைக்கு 'தமிழ்நாடு' என்று பெயரிடவும் பயந்து சாகும் தொடைநடுங்கிகளாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்!

—இத்தகைய இருதயமற்றவர்கள் மீண்டும் மத்திய அரசாங் கத்தின் அதிகாரத்திற்கு வழக்கம்போல் அடிபணிந்து; தமிழர்களின் நெஞ்சாழத்தை அளந்து பார்க்க எண்ணங் கொண்டார்களேயானால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கையில் அல்லலுறும் சகோதரர்களுக்காக மனமிறங்கி; அவர்களுக்காக டெல்லியிடம் ஒரு பேச்சு பேசாதவர்கள்; சொந்த நிலத்தினை அடுத்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு, எடுப்பார் கைப் பிள்ளையாக வாழ்பவர்கள்; உள்ள பெயரை உரிய காலத்தில் சூட்டு தற்கும் தயங்குபவர்கள்; 'இழிதகை இந்தியைக் கட்டாயப் பாடமாக்க மாட்டோம்; கட்டிக் கரும்பாம் எங்கள் தமிழ் ஓங்கி நிற்கும் பள்ளி களில் வேம்பு நிகர் வேற்று மொழியை எவ்வாறு திணிப்போம்'— என்று எப்படிப் பதில் தருவார்கள் என்று நாம் நம்ப முடியும்?

—இருந்தாலும் காமராசர் ஓரளவு மக்கள் மனதைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதாக நடிப்பு செய்யும் அரசியல் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

அவரே மூன்றாவது முறையாக கட்டாய இந்திக்குக் கால்கோள் செய்ய முயற்சிப்பாரானால் அவர் நிச்சயம் தெரிந்து கொள்ள வேண் டும், கட்டி முடிக்கப்படாத அவரது எண்ணக் கோட்டை நிச்சயம் இடிந்து மண்ணோடு மண்ணாகியே தீரும்!

அவரது எதிரி ஆச்சாரியார் இரண்டாவது சாணக்கியர் என்று பெயர் பெற்றவர்; எப்படிச் சதி நடத்தினால் வைரிக்கு வாய்க்கரிசி போடலாம் என்னும் குள்ளநரி வித்தையிலே கைதேர்ந்த சமர்த்தர்!

அவரே தோற்றிருக்கிறார்—ஒரு முறையல்ல; இருமுறை தமிழர்களிடம்!

சூழ்ச்சித் திறனிலும் குள்ளநரிக் கொள்கையிலும் அவரைவிட எந்த விதத்திலும் கை தேர்ந்தவரல்ல காமராசர்!

நரியே தோற்றிருக்கிறது; குல்லுகபட்டரே தோல்வியை அணைத் திருக்கிறார், வேறு வழியின்றி!

அவரே இப்போது உணர்ந்தும் வருகிறார், இந்தி கூடாது என் னும் உன்னதக் கருத்தினை!

காமராசர் சமர்த்தர்; அனுபவம் ஒன்றினையே மூலதனமாகக் கொண்டு 'அரசியல் வியாபாரம்' செய்ய வந்திருப்பவர்.

—அவர் பாடம் பெற வேண்டும்; சென்ற கால ஏடுகளைப் புரட்டிப் பார்த்து ஆச்சாரியார் அனுபவம் சொல்கின்ற கசப்பான உண்மையை எப்பாடுபட்டாவது கண்களை மூடிக் கொண்டு விழுங் கியே தீரவேண்டும்!

அதையும் மறந்து காமராசர் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கு வது என்று முடிவு கட்டுவாரேயானால் நான்—நீ என்று போட்டி போட்டுக் கொண்டு தயாராக இருக்கிறார்கள் தமிழர்கள், அவர் திணிக்க இருக்கும் கட்டாய இந்திக்கு ஒரு முடிவு கட்டுவதற்கு!

—அந்த அனுபவசாலி இந்த அனுபவம் பெற வேண்டாமென்றே அறிவுரை கூற விரும்புகிறோம்.

தென்னிந்தியனும்; கட்டபொம்மன்! திருந்துகிறார்கள்; திருந்துகிறார்கள்!

உண்மைக்கு எதிர்ப்பு காட்டி வாளை உருவி நின்றவர்கள், பிறகோர் நாள் மனம் உருகிக் கண்ணீர் வடிப்பதை, நாம் வரலாற்றிலே படித்திருக்கிறோம்.

அந்த அழகான தத்துவத்தை மனதிற்கொண்டுதான் இன்று நம் கொள்கையைக் காய்பவர்களையும்; காறி உமிழ்பவர்களையும்; கையாலாகாதவர்கள் என்று கனைத்துக் காட்டுபவர்களையும் கண்டும் காணாதது போல்; அவர்களது உளறல்களைக் கேட்டும்கேட்காதவர்கள் போல்; அலட்சியச் சிரிப்பு சிந்தி இலட்சியபுரிப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்கிறோம், நாம்.

வடக்கு வாழ்கிறது;

தெற்கு தேய்கிறது!

—வெறும் அடுக்குச் சொல் அலங்காரத்திற்காகவே இதைக் கூறிவருகிறோம் என்று கேலி புரிந்தவர்கள்' இன்று இதில் வெறும் வார்த்தை அலங்காரம் மட்டும் இல்லை; "மாபெரும் அரசியல் தத்துவமே குறள் வடிவில் அடங்கிக் கிடக்கிறது என்பதை அறிந்து ஆச்சரியப்படுவதையும்; இதை எல்லோரும் புரிந்துகொண்டு விட்டார்களே—என்று அவதிப்படுவதையும் காண்கிறோம்!

அண்மையில்', ஆச்சாரியார் சென்னையிலே 'கட்டபொம்மன்' நாடகத்திற்குத் தலைமை வகித்திருக்கிறார்.

அப்போது கட்டபொம்மன் தமிழனா; தெலுங்கனா—என்று கிளம்பியிருக்கும் 'சர்ச்சை'க்கும் பதில் சொல்லியிருக்கிறார்.

"அவன் தமிழனாயிருந்தால் என்ன; தெலுங்கனாயிருந்தால் என்ன? அவன் ஒரு பிரபல தென்னிந்தியன்."

—இது அன்று அவர் பேசிய வார்த்தைகள்!

தமிழனோ தெலுங்கனோ கவலை 'இல்லை; அவன் ஒரு இந்தியன்.

—இப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும் ஆழ்ந்த அனுபவம் பெற்றிருக்கிற ஆச்சாரியார்!

ஆனால் அவர்,

கட்டபொம்மன் ஒரு இந்தியன் என்பதற்காகப் பெருமைப்படுவோம்; "தமிழனா தெலுங்கனா என்ற குறுகிய வாதத்தையே விட்டொழிப்போம்!

—என்று உபதேசம் செய்திடவில்லை!

கட்டபொம்மன் ஒரு தென்னிந்தியனாம்!

தமிழன் அல்லது தெலுங்கன் என்ற தன்மைக்கு அப்பாற்பட்ட; ஆனால் அதே நேரம் இருவருக்கும் பொதுவான—ஒரு தென்னிந்தியனாம்!

—ஏக பாரத ஆதரவாளராக இன்றும் இருந்துவரும் ஆச்சாரியார்தான் 'இந்தக் கருத்துபட பேசியிருக்கிறார்!

தென்னிந்தியன்!

இந்தியாவின் தென் பகுதியைச் சேர்ந்தவன்!

இந்தியாவின் தென் பகுதி தட்சிணம் அல்லது தக்கணம்!

அதனால் கட்டபொம்மன் தக்கணத்தைச் சேர்ந்தவன்!

இந்தியாவின் தென் பகுதியின் பூர்வகுடிகள் திராவிடர்!

அதனால் இந்தியாவின் தென் பகுதி திராவிடம்!

அதில் வாழ்ந்ததால் கட்டபொம்மன் ஒரு திராவிடன்!

—ஆச்சாரியார் தன்னையறியாமலேயே இவையனைத்தையும் கண்களை மூடிக்கொண்டு ஒப்புக்கொண்டவராகிறார்!

கட்டபொம்மன் தலைசிறந்த விடுதலை வீரன்! வெள்ளைக்காரனை முழுமூச்சோடு எதிர்த்தவன்! சாவுக்கும் அஞ்சாத அத்தகைய வீரன் காஷ்மீரில் இருந்தால் என்ன; கன்யாகுமரியில் இருந்தால் என்ன? அவன் இந்தியன்! தமிழன்; தெலுங்கன்—என்ற பேதம் எதற்காக?

—இந்தியா ஒன்று; அதைப் பிரிப்பதோ பிளவுபடுத்துவதோ தவறு என்று உண்மையிலேயே மனதார நெஞ்சாரக் கருதுகிறவர்கள் இப்படித்தான் கூறியிருக்கவேண்டும்!

ஆனால் ஆச்சாரியாரோ இனிமேலும் பிளவுபடுத்தக்கூடாது என்று கருதுகிற இந்தியாவை வடக்கு தெற்கு என்று இரண்டாகப் பிளவுபடுத்தி; அதில் கட்டபொம்மனை தென் இந்தியன் என்று கூறியிருக்கிறார்!

கட்டபொம்மன் இந்தியன் அல்ல; அவன் ஒரு தென்னிந்தியன்-அதாவது திராவிடன்.

—எப்படியோ 'அங்கும்' நாம் தூவிய விதை முளைவிட ஆரம்பித்திருக்கிறது!

இந்தியர்களை வட இந்தியர்கள்—தென்னிந்தியர்கள் என்று பிரிக்க முடியுமானால்—

அப்படிப் பிரித்து அவர்களுக்கெல்லாம் அவர்களுக்கே உரிய தனித் தனி குணாதிசயங்களைக் காட்ட முடியுமேயானால்—

இப்போது இருக்கிற இந்தியாவையும் ஏன் இரண்டாகப் பிரிக்கமுடியாது?

அப்படிப் பிரிக்கப்பட்ட அந்த இரு இந்தியாக்களும் ஏன் தனித் தனி சுதந்தர நாடுகளாகத் தனித்து வாழ முடியாது?

—ஆச்சாரியாரும் அவரது கருத்து கொண்டவர்களும் இப்போது இதற்குப் பதில் சொல்லமாட்டார்கள்; இப்போதுதானே இவற்றையெல்லாம் அவர்கள் மெள்ள மெள்ள உணரத் துவங்கியிருக்கிறார்கள்; இனிமேல்தான் அவர்களுக்கு இவை தெரிய ஆரம்பிக்கும்!

அப்படி இப்போதே தெரிந்திருந்தாலும்கூட அவற்றை எப்படித்தான் அவர்களால் வெட்கத்தைவிட்டு வெளியில் சொல்ல முடியும்?

ஒரேயடியாக உணர்ந்துவிட்டாலும் மெள்ள மெள்ளத்தான் அவற்றை வெளியிடுவார்கள்—காரணம், அவர்கள் இருந்த-இப்போது இருக்கின்ற-இடம் அப்படி!

★

இருந்தாலும் ஆச்சாரியார் இந்தியைப் பொறுத்தவரையில் இப்போது சற்று—இல்லை, இல்லை—வெகுவாக முன்னேற்றமடைந்தே காணப்படுகிறார்.

'பச்சைத் தமிழ'ருக்கும் இல்லாத துணிவை இவரிடத்திலே கண்டு தமிழகமே வியப்பில் மூழ்கியிருக்கிறது!

23—10—57 அன்று மயிலை கலாச்சாரக் கழகத்திலே பேசும்போது அவர் குறிப்பிட்டிருக்கிறார்:

"வெள்ளையர்கள் வெளியேற வேண்டும் என நாம் விரும்பியபோது, ஏகாதிபத்தியமும் ஒழியவேண்டும் என்றுதான் ஆசைப்பட்டோம்! ஆனால்...! இந்தியா முழுமைக்குமாக இந்தி ஆட்சி மொழியாக்கப்படுவது, இந்தியாவின் ஒரு பகுதி இதர பகுதிகளை ஆளுவதற்கு வழிகோலும்; அது ஜனநாயகத்தை மறுப்பதற்கு—ஒரு ஏகாதிபத்தியத்திற்குச் சமமானதாகும்.

"இந்தியைத் திணிப்பது என்பது, வேறு உருக்கொண்ட ஏகாதிபத்திய ஆட்சி என்பதைத் தவிர வேறு இல்லை.

"நான் இந்த இந்திப் பிரச்சினை குறித்து பல கூட்டங்கள் நடத்துவதற்குக் காரணம், இந்தி, மத்திய சர்க்காரின் ஆட்சி மொழியாவதை நாம் எதிர்த்துத் தீரவேண்டிய அளவு முக்கியமான விஷயமாகும்.

"ஏதாவது கருத்து வேற்றுமை என்றால், எதையாவது செய்யட்டும்; அது சரியா தவறா என்பதைப் பின்னர் உணரட்டும் என டெல்லி சர்க்காரையே முடிவு எடுத்துக் கொள்ள அனுமதித்துவிடலாம்.

"ஆனால், இந்த விவகாரம் நமது (தென்னாட்டு) மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும். அதனால்தான், மக்கள் இந்தப் பிரச்சினையைப் புரிந்துகொள்ள மட்டுமின்றி, இந்தித் திணிப்பை எதிர்க்கவும் உடன் தயாராக வேண்டும் என்பதை எனது கடமையாகக் கருதுகிறேன்.

"நீங்கள் பிரச்சினையைப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது; இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தவும் தயாராக இருக்கவேண்டும்.

"பல கோணங்களிலிருந்தும் பிரச்சினையைப் பார்த்துவிட்டு சாஸ்திர ரீதியான முடிவுகளுக்கு வந்தால்மட்டும் போதாது.

"கோழிச் சண்டையையோ, கால் பந்தாட்டப் போட்டியையோ பார்த்துக் கொண்டிருப்பவர்கள் வேண்டுமானால் அப்படி இருக்கலாம்; ஆனால், இது ஒரு விளையாட்டுப் பந்தயம் அல்ல; நாம்தான் கால் பந்துபோல உதைத்துத் தள்ளப்படுகிற மக்களாயிருக்கிறோம்; எனவே இது ஒரு முக்கியமான—ஜீவாதாரமான விவகாரமாகும். இதில் நாம் காலம் தாழ்த்தாமல் அக்கறை காட்டியாக வேண்டும்!"

—இந்தி திணிப்பை எதிர்த்து இவ்வளவு ஆவேசமாகச் சொற்பெருக்காற்றியிருக்கிறார்!

ஆனால் இந்திக்குப் பதில் அன்னிய மொழியான ஆங்கிலத்தையா வைத்துக்கொள்வது?

அன்னிய மொழியை—நம்மை அடிமைப்படுத்திவைத்திருந்தவனுடைய மொழியை—அவன் ஆதிக்கம் ஒழிந்தபிறகும் நாம் உபயோகித்துவருவது அவமானமில்லையா?

—இந்தி வெறியர்கள் இந்தக் கேள்வியைத்தான் துருப்புச் சீட்டாகப் பிரயோகிக்கிறார்கள்!

அவர்களுக்கெல்லாம் அமைதியாக நாம் பதில் சொல்லவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தவில்லை, ஆச்சாரியார். அவரே கூறுகிறார், படியுங்கள்:

"அவர்களுக்குச் சொல்லுகிறேன்—நீங்கள் காமன்வெல்த் தொடர்பை வைத்துக்கொள்ளுகிறவரையிலுமாவது ஆங்கிலம் இருக்கட்டுமே!

"தங்கள் கௌரவத்தை மறந்து காமன்வெல்த் உறவுகொள்ளுவதற்குத் தங்களை 'பவ்வியப்படுத்திக் கொண்டுள்ளவர்கள், ஆங்கிலத்தை ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது?

"காமன்வெல்த்தில் உள்ள நாடுகள் பலவற்றின் கொள்கைகள் இந்தியாவின் கொள்கைகளுக்கு விரோதமானவை; அதுமட்டுமல்ல—ஐ. நா. மற்

[தொடர்ச்சி பக்கம் 9]

• கதவு திறந்து கொண்டது!

8

ஆவலும் பயமும் நிரம்ப சாது பார்த்தார். கடைந்தெடுத்த தந்தச் சிலையொன்று கலையூறும் கண்களோடு, 'ஏன்' என்று கேட்பதுபோல் அவரைப் பார்த்தது.

"அம்மணி, என் பெயர் நிர்மலானந்தன்! மதுராபுரியிலிருந்து வந்திருக்கும் ஒரு பக்தன்," என்று சாது தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"அப்படியா? வாருங்கள் சுவாமி, உள்ளே வாருங்கள்!" என்று குயில் பழிக்கும் குரலில் அந்தப் பெண் அவரை அழைத்தாள். சஞ்சலம் நீங்கி, சந்தேகம் நிரம்ப, காந்தத்தைத் தொடரும் இரும்பைப்போல் நிர்மலானந்தர் அந்தக் கட்டழகியைத் தொடர்ந்து சென்றார். உள்ளே சென்றவுடன், ஒரு வெள்ளிச் செம்பில் நீர் கொண்டு வந்து அவருக்குக் கால் கைகள் கழுவக் கொடுத்தாள். வீட்டின் உட்புறம் சாதாரண வீடாகத் தோன்றவில்லை. எங்கும் விலையுயர்ந்த பொருட்களே நிரம்பிக் கிடந்தன. தமிழகத்து முத்தும், சீனத்துப் பட்டும், கிரேக்கத்து சிற்பத் திறன் விளக்கும் அழகிய பொருட்களும் நிரம்ப இருந்தன. பட்டும் பீதாம்பரமும் அலட்சியமாகக் கட்டில்களில் விரிக்கப்பட்டுக் கிடந்தன. அரேபிய நாட்டு வாசனைத் திரவியங்களின் நெடி மூக்கைத் துளைத்தது. சாது நிர்மலானந்தர் மூக்கைப் பலமாக ஒருமுறை உறிஞ்சிக் கொண்டார். அவருடைய கண்கள் சுற்றிலும் சுழன்றன. ஆண் வாடை இருப்பதற்கான அறிகுறிகளே தென்படவில்லை. 'யார் இந்தப் பெண்? யார் இந்தப் பெண்?' என்ற கேள்வி அவருடைய மன அரங்கில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது!

"அதோ, அந்த ஆசனத்தில் அமருங்கள்," என்று கூறிவிட்டு மான் போலத் துள்ளி ஓடினாள். ஆசனத்தைப் பார்த்தார் சாது. அது ஒரு ராஜ சிம்மாசனத்தைப் போல் காட்சியளித்தது. ஆசனத்தில் அமர்ந்து என்ன நடக்கப் போகிறதோ என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று, சற்று தூரத்தில் உள்ள இசைக் கருவிகள்மீது அவருடைய பார்வை விழுந்தது. அங்கிருந்த பல இசைக் கருவிகள் அவருக்குப் புதிதாகத் தோன்றின. ஒரு புறத்தில் 'சிதார்' இருந்தது. சிதாரை எடுத்து இசைத்தால் மனதிற்கு நிம்மதி ஏற்படும்போல் நிர்மலானந்தருக்குத் தோன்றியது. எண்ணம் செயலாகும் முன், கையில் மலர்க் கூடையை ஏந்திக் கொண்டு வசந்த காலத் தென்றலைப்போல் அவள் வந்து கொண்டிருந்தாள். சாது அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

அஞ்சனம் தீட்டிய அழகிய விழிகள் காவிய வெள்ளத்தைப் பெருக்கெடுத்து ஓடவிட்டுக் கொண்டிருந்தன. சாதுவின் உள்ளம் புல்லரித்தது. கண்ணிமைக்காமல் அள்ளி விழுங்கிவிடுபவர்போல் அந்த அழகுப் பெட்டகத்தை ஒரு கணம் பார்த்தார். தோற்றமும் செயலும் இணையாதது கண்டு அந்த ஏந்திழை என்ன நினைப்பாளோ என எண்ணிய நிர்மலானந்தர், கண்களை வேறு புறமாகத் திருப்பினார்.

"சுவாமி!"—வீணையின் தந்தி மெதுவாய் அதிர்ந்ததுபோல் கானமிசைத்தது அந்தக் குரல்.

நிர்மலானந்தரின் பாதங்களை அவள் பயபக்தியோடு கழுவிக் கொண்டிருந்தாள். அவளுடைய கரம் படும்போதெல்லாம், உடலெங்கும் ஒரு இன்ப வேதனை வியாபிப்பதை உணர்ந்தார். அவள் பாதங்களில் மலர் தூவினாள். அவளுடைய கரம்பட்ட இடத்தில் விழும் மலர்கள்கூட உறுத்துவது போன்ற ஒரு வித உணர்ச்சி அவருக்குத் தோன்றியது. கருமுகிலென நெளிந்து கிடக்கும் அவளுடைய பட்டுப் போன்ற கூந்தலைத் தடவிவிட வேண்டுமென்ற உணர்ச்சி சாதுவிற்கு ஏற்பட்டது. அதிதியை இவ்வளவு அன்போடு உபசரிக்கும் ஒரு பெண்ணிடம்—அதிலும் ஆண் துணையின்றி அவள் தனிமையாக இருக்கும்பொழுது—அவள் அளிக்காத உரிமையை எடுத்துக் கொள்ள முயல்வது மரியாதையல்ல என எண்ணி, சாது பேசாமல் இருந்தார்.

"சாது இரவெல்லாம் தூங்கவில்லை போலிருக்கிறது; மிகவும் களைத்துக் காணப்படுகிறீர்கள்...," என்றாள் பரிவோடு.

முன்பின் அறிமுகமில்லாத பெண் தன்னிடம் காட்டும் பரிவையும் பாசத்தையும் பார்த்த சாதுவின் உள்ளம் நெக்குருகியது. மதப் போர்வையில் மதம் பிடித்து அலையும் புரோகிதர்கள் உள்ள சோமநாதபுரத்தில்தான், வந்தோரை வணங்கி உபசரிக்கும் இந்தப் பெண்ணும் வாழ்கிறாள் என்பதை எண்ணிய போது நிர்மலானந்தருக்கு நிம்மதி ஏற்பட்டது.

"உணவருந்தலாம் வாருங்கள்," என்றாள் குழைவோடு.

மகுடியின் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்ட நாகம்போல், அவளுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தார்.

"தாங்கள் என்ன உணவு அருந்தும் பழக்கமோ?"

நிர்மலானந்தரின் முகத்தில் ஒரு விஷமப் புன்னகை அரும்பியது. "பசிகூடப் பறந்துபோய் விட்டது......," என்றார்.

"ஆமாம், சோமநாதபுரத்தின் இயற்கை அழகும் அதற்குத் தெய்விகக் களை கட்டி நிற்கும் ஆலயமும் பசியைக்கூடப் போக்கிவிடும் ஆற்றல் படைத்தது...," என்றாள் அவள்!

"இங்கே பச்சைக் கிளிகள் அதிகம் போலிருக்கிறது......," என்றார் சாது.

"பச்சைக் கிளிகள் என்ன; பாடிடும் குயில்களும் ஆடிடும் மயில்களும்கூட நிறைய உண்டு. சோமநாதரின் அருள் பெற்ற பூமியல்லவா இது...," என்றாள்.

சாது, அவளுடைய சாதுர்யமான பேச்சைக் கேட்டு சிந்தனையில் ஆழ்ந்தார். பழ வகைகளும் பாலும் கொண்டுவந்து பரிமாறினாள். கனிகளின் ருசியைவிட அவற்றைப் பரிமாறிடும் கைகளின் அழகை ரசித்தபடியே நிர்மலானந்தர் வயிறுறப் புசித்தார்.

"அம்மணி, ஒரு விஷயம் உங்களைக் கேட்கலாமா...? நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன என்பதை நான் அறியலாமா?"

"என் பெயர் திலோத்தமா," என்றாள் அவள். அதற்குமேல் வார்த்தைகள் வெளிவரவில்லை. நிர்மலானந்தர் நிமிர்ந்து பார்த்தார். அவளுடைய கரிய விழிகளில் நீர் திரையிட்டு நின்றது.

"மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மணி. நான் இந்த இடத்திற்குப் புதியவன். இங்குள்ள பழக்க வழக்கங்கள் எனக்குத் தெரியாது..."

"சுவாமி, நீங்கள் கேட்ட கேள்விகளில் தவறொன்றுமில்லை... நான் தேவதாசி! ஆண்டவனின் சேவைக்கெனவே அர்ப்பணிக்கப்பட்டவள்...!"

அவள் பேசி முடிக்கவில்லை. அவளுடைய கண்களிலிருந்து 'பொல பொல' வென்று கண்ணீர் கொட்டி கன்னங்களை நனைத்தது.

சாதுவின் உள்ளம் நெகிழ்ந்தது!

"தேவதாசிகளாக்கப்பட்ட எங்களைப் போன்றவர்களுடைய உடலும் உயிரும் ஆண்டவனுக்கும் அவர்தம் அடியாருக்கும் மட்டுமே சொந்தம்... சுவாமி, ஆசைக்காகச் சிலர் கிளிகளைக் கூண்டிலடைத்து அவைகளோடு கொஞ்சி மகிழ்வதைக் கண்டிருப்பீர்கள். கிளியோடு பேசுவதில், அதைப் பேசவிட்டு மகிழ்வதில் அவர்களுக்கு இன்பம் இருக்கலாம்; ஆனால் கிளிக்கோ...? கிளியின் சிறை வாழ்க்கைதான் அவர்களுடைய இன்பத்திற்கு ஆதாரம்... ஒரு வகையில் நாங்களும் கூண்டிலடைபட்ட கிளிபோலத்தான்...,"-திலோத்தமா சோகம் இழையோடப் பேசினாள்.

"இங்கு இசைக் கருவிகள் இருக்கின்றனவே, அவைகளெல்லாம்...,"—சாது வியத்தைக் கேட்டார்.

"ஆம்; நாட்டியம், இசை ஆகியவற்றில், எங்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்படுகிறது. எத்தனையோ சிற்பக் கலைஞர்களின் சலியாத உழைப்பினால் உருவான தேவாலயத்தில் கலைக்கு சிரஞ்சீவித் தன்மையை அளித்துக் கொண்டிருப்பவர்கள் நாங்கள்தான்... ஆடலும் பாடலும் நாங்கள் மகிழ்வதற்காக அல்ல; பிறரை மகிழ்விப்பதற்காக...," என்றாள்.

"நீங்கள் கன்னியாகவேதான் வாழ்க்கையைக் கழிக்க வேண்டுமா...?"—நிர்மலானந்தர் குழந்தையைப்போல் கேள்வியைக் கேட்டார்.

சோகம் கப்பிய முகத்திலும் நாணத்தின் ரேகை படர்ந்தது. அவள் பதில் ஏதும் பேசவில்லை. நிர்மலானந்தருக்கும் அதற்குமேல் என்ன பேசுவதென்று தெரியவில்லை. சிறிது நேரம் வரை இருவரும் பேசாமல் மௌனமாகவே இருந்தார்கள். அவள் மெதுவாக அவரைப் பார்த்தாள். அவரோ அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். வெட்கத்தால் அவள் தலை கவிழ்ந்தாள்.



"நீங்கள்மட்டும் இந்த வீட்டில் தனியாகத்தான் இருக்கிறீர்களா?"

"இல்லை; பணிப்பெண்களும் இருக்கிறார்கள்," என்றாள் திலோத்தமா.

பணிப்பெண்கள் இருக்க, அவர்களை விடாமல, இவள் ஏன் வந்து இவ்வளவு உபசாரம் செய்யவேண்டும் என்று நிர்மலானந்தருக்கு விளங்கவில்லை. அவள் தேவதாசி என்று சொன்னாலும் தோற்றத்தில் புண்ணியக் குறைவு ஏதும் தென்படவில்லை.

"சுவாமி! களைப்பாக இருக்கிறீர்கள்.....தயவு

[தொடர்ச்சி பக்கம்—8]

நீட்டோலை

அன்புள்ள பொன்மொழி!

காஞ்சீபுரம் சேலைகட்டி...

"காஞ்சீபுரம் சேலை கட்டி
கைநிறைய வளையல் பூட்டி
குளித்தலை ரவிக்கை போட்டு—
செல்லக்கண்ணு
நீ குலுக்கி மினுக்கி நடக்கிறயே
—குள்ளக்கண்ணு!..."

பத்திரிகை அலுவலகத்தின் ஒடிந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இந்தப் பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தார் ஆசிரியர்.

அவருக்கே ஒரு தனி ஆனந்தம். தன் இசையை யாராவது கேட்டு ரசிக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தார். யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. கொஞ்சம் உரத்த குரலில் 'பாட' ஆரம்பித்தார்.. "கண்டேன்; கண்டேன்," என்று ஒருவன் அவசரமாக அலுவலகத்தில் நுழைந்து பரபரப்போடு அங்குமிங்கும் பார்த்தான்.

"என்னப்பா; என்ன பார்க்கிறாய்?" என்று அலுவலகப் பையன் அவனைக் கேட்டான்... அவன் பையனின் காதில் ரகசியமாக ஏதோ கூறிவிட்டு சிரித்தபடி வெளியேறினான். அவன் ஒரு சலவைத் தொழிலாளியென்பதும் அவனது 'வளர்ப்பு' காணமற் போய்விட்டதென்பதும் பாட்டுக் குரல் கேட்டதும் 'பத்திரிகை' அலுவலகத்திற்கு அவன் ஓடோடி வந்திருக்கிறான் என்பதும் பையனுக்கு மட்டுமே தெரியும்.

ஆசிரியர் அதையெல்லாம் கவனிக்காமல் இன்னும் உரத்த குரலில் பாட ஆரம்பித்தார். "குலுக்கி மினுக்கி நடக்கிறயே; குள்ளக்கண்ணு!" என்ற வரிகளை அவர் அனுபவித்துப் பாடினார்.

"அப்பா! அப்பா!! பாத்தீங்களா ஆசிரியரை......? என்னைப் பார்த்துப் பாடறார்!......நான் குலுக்கி மினுக்கி நடக்கிறேனாம்!..."

—என்று செல்லமாகக் கொஞ்சியபடி ஆபீஸ் முதலாளியிடம் ஓடினாள் அவரது மகள்.

முதலாளி, மகளைக் கனிவோடு தழுவிக் கொண்டு, "அவன் உன்னைப் பற்றியா பாடுகிறான்—அவன் ஒரு பைத்தியம்; ஏதோ உளறிக் கொண்டிருக்கிறான்—நீ சும்மா இரம்மா!" என்று ஆறுதல் கூறினார். மகளுக்கோ திருப்தியில்லை. அப்பா, அந்த ஆசிரியரைக் கூப்பிட்டுக் கண்டிக்க வேண்டுமென்று விரும்பினாள்.

"என்னைத்தானப்பா அவர் கேலி செய்கிறார்—'காஞ்சிபுரம் சேலை கட்டி—குளித்தலை ரவிக்கை போட்டு' என்று பாடுகிறாரே; அது என்னைத்தான்! இதோ, காஞ்சிபுரம் சேலை!... இதோ, குளித்தலை ரவிக்கை!... நான்தானே அவைகளை அணிந்திருக்கிறேன்—அதனால் அவர் பாடுவது என்னைக் குறித்துத் தானப்பா!"

"அப்படிப் பாடினால்தான் என்னம்மா! சேலையும் ரவிக்கையும் பெண்கள் மானத்தைக் காப்பாற்றுவதற்காகத்தானே—அவைகளை அணியாமல் அலைகிறாய் என்று பாடினால்தான் அவன்மீது ஆத்திரம் வரவேண்டும்; நியாயமாக! நீதான் அவைகளை அணிந்து கொண்டு அழகாக விளங்குகிறாயே; உனக்கேன் கோபம் வருகிறது?"

"இல்லையப்பா!......" குள்ளக் கண்ணு" என்று அவர் பாடுவது என்னைத்தான்! அவர் கொஞ்ச நாளாய் ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறார்!"

"இந்த பார், ஏதாச்சும் உளராதே! உன் பேச்சைக் கேட்டு நான் அவனைக் கண்டிக்கப் போய் அவன் என்மேல கோபித்துக் கொண்டு வெளியேறி விட்டால் அப்புறம் நம்ப பத்திரிகைக்கு ஆசிரியரே கிடைக்க மாட்டான்; தெரியுமா?"

"கோபமா? நம்ப ஆசிரியருக்குக் கோபம்கூட வருமா? என்னப்பா இது அதிசயமா சொல்றீங்க! அவரு முதல் நாள் எழுதின தலையங்கம் முட்டாள் தனமானது; இன்றைக்கு நான் எழுதுவதுதான் சரியான கருத்துடையது—என்று பத்திரிகையிலேயே விளம்பர செய்தீர்கள்; கோபம் வருகிற ஆளாயிருந்தால் அப்போதல்லவா கோபம் வந்திருக்க வேண்டும்! சுயமரியாதையே இல்லாமல் நடந்து கொண்டார் என்று ஊர் முழுதும் பேசினார்கள்; அவருக்காவது கோபமாவது!"

"அடடா—உரக்கப் பேசாதேயம்மா! அந்த மனுஷன் காதில விழப்போகிறது. ஆலையில்லா ஊருக்கு இலுபபைப் பூ சர்க்கரைன்னு 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்' என்று நான் அவனைக் கட்டிக்கிட்டு அழுது கொண்டிருக்கிறேன். நீ வேற காரியத்தைக் கெடுத்து விடுவாய் போலிருக்கே! முன்பெல்லாம் அவனுக்கு ரோஷம் வராததற்குக் காரணம்; பெரிய இடங்களில் தொடர்பு இல்லாமல் இருந்தது — இப்ப; 'நமக்குத் தெரியாமலேகூட 'பெரிய இடத்துத் தொடர்பு' வைத்துக் கொண்டு அவனுக்குத் தேவையான காரியங்களை யெல்லாம் சாதித்துக் கொள்கிறான். சுருக்கமாகச் சொன்னால் இப்ப அவன் கை கொஞ்சம் ஓங்கியிருக்கிறது!"

"அம்மாடி! அப்படியா சங்கதி—அப்பா! இதுமாதிரி ஒரு ஆபத்து வளருவதை அனுமதிக்கக் கூடாதப்பா.— இன்னொரு புதிய ஆசிரியரை இப்போதே தயார் செய்து கொள்வதுதான் நல்லது!"

"யாரும் இவனைப் போல கிடைக்க மாட்டானம்மா!"

"அப்படி யென்னப்பா இவரிடம் திறமையிருக்கிறது?"

"திறமையாவது மண்ணாங்கட்டியாவது! அதெல்லாம் ஒரு காலத்திலே அபரிமிதமாய்த் தானிருந்தது — இப்ப; 'சுவர் எழுத்தாளனுக்கும் இவனுக்கும் கொஞ்சங்கூட வித்தியாசமில்லை! நமக்கும் இப்ப இந்த மாதிரி ரகம்தான் தேவை!"

"அப்படின்னு யாராவது ஒரு சுவர் எழுத்தாளனை ஆசிரியராய் ஆக்கி விடுவது?"

"அடடா, என்னம்மா விடவே மாட்டேன் என்கிறாய். சுவர் எழுத்து நடையாயிருந்தாலும் பிழையில்லாமல் எழுத வேண்டாமா? சுவர் எழுத்து நடையிலும் கொஞ்சம் சுறு சுறுப்பான நடை இவனுடையது. கடுகை மலையாக்கி, கத்தரிக்காய்க்கு காலும் மூக்கும் வைத்து ஒன்றுக்குஇரண்டாய்எழுதுவதிலே கை தேர்ந்த சமர்த்தனம்மா இவன். பச்சைப் புளுகை உண்மைபோல படம் பிடித்துக் காட்டுவான்! நேற்று ஒன்று; இன்று ஒன்று; நாளை ஒன்று; இப்படிப் பலவேறு கருத்துக்களை ஒரு பிரச்சினைபற்றி வெளியிடுவதில் இவனுக்கு நிகர் நான்கூட இல்லை!"

"அப்பா! அப்பா! கவிஞர் வருகிறார்; கவிஞர் வருகிறார்!"

"வாருங்களய்யா வாருங்கள்! உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்."

"என்ன; ஒரே சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள்; இருவரும்!"

"ஒன்றுமில்லை; நமது ஆசிரியர் ஒரு பாட்டுப் பாடுகிறாராம்; அதிலே இதற்குக் கோபம் வந்துவிட்டது!"

"என்ன பாட்டு அது?"

"கவிஞரிடம் பாடிக் காட்டம்மா அதை!"

"காஞ்சீபுரம் சேலை கட்டி
கைநிறைய வளையல் பூட்டி
குளித்தலை ரவிக்கை போட்டு
—செல்லக் கண்ணு
நீகுலுக்கி மினுக்கி நடக்கிறயே
—குள்ளக் கண்ணு!"

கவிஞர் பாட்டைக் கேட்டு சிரிக்கிறார்.

முதலாளியும் புன்னகை புரிந்துவிட்டு, "இதில் என்னய்யா தப்பு இருக்கிறது?" என்று கவிஞரைப் பார்த்துக் கேட்டார்.

கவிஞர், "ஒரு தப்பும் இல்லையே! காஞ்சிபுரம்சேலை; நூல் நயம்—சாயம் கெட்டி! உத்திர வாதமானது என்று பெயர் பெற்றது! குளித்தலைப் பகுதி நெசவுத் தொழிலாளர்களும் திறமைசாலிகள், நேர்மையானவர்கள்—போலி ரவிக்கைத் துணி தயாரிப்பதில்லை...தையற்காரர்களும் கெட்டிக்காரர்களே!...காஞ்சிபுரம் சேலை!... குளித்தலை ரவிக்கை!...இரண்டும் மானம் காப்பதிலும் சாயம் காப்பதிலும் பேர் பெற்றவை தான்!" என்றார்.

முதலாளியின் மகளுக்கு சமாதானமாகவில்லை.

அவள் கவிஞரிடம், "நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்! ஆசிரியர், காஞ்சிபுரம் குளித்தலையென்று குறிப்பிட்டுப் பாடுவதால் நான் கட்டிக்கொண்டிருக்கும் ஆடைகளைப் பற்றிப் பாடுகிறார் என்பது விளங்குகிறது. அதனால் எனக்குக் கோபம் வருகிறது," என்றாள் சிணுங்கிக்கொண்டே!

"சரியம்மா வருத்தப்படாதே! நான் ஆசிரியருக்கு வேறு பாட்டு ஒன்று எழுதிக் கொடுத்து அதைப் பாடிக்

அவர்கள் யார்?

"திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவன் துச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றைய தினம் துணி கிடைக்கும்? அதைப்போல, தமிழனுக்கு இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதை வடநாட்டுக்காரன் தீர்மானிப்பதென்றால் நம்முடைய தமிழ்மொழி எப்படித் தப்பும்?

"திரௌபதைக்கு எந்தத் துகில் தேவை என்பதை தருமன் சொன்னால் ஏதோ கொஞ்சம் நாட்டுச் சேலையையாவது வாங்கித் தந்திருப்பான்; அர்ச்சுனன் சொன்னால் கொஞ்சம் அலங்கார சேலை வாங்கிக் கொடுத்திருப்பான். துரியோதனனோ துச்சாதனனோ சொன்னால் எந்தச் சேலை கிடைத்திருக்கும்? இருக்கிற சேலையையும், உருவினவர்களல்லவா அவர்கள்?

"அது போன்று, இருக்கின்ற அரசியலைப் பறித்துப் கொள்ளும் வடநாட்டுக்காரன், 'உங்களுக்கு எந்த மொழி தேவை?' என்று கேட்பது, துச்சாதனனைப் பார்த்து, 'திரௌபதைக்கு எந்தச் சேலை வாங்கலாம்?' என்று கேட்கின்ற அத்தகைய வெட்கங்கெட்ட கதையைப் போன்றதுதான்! ஆகவேதான், அப்படிப்பட்ட விதி ரத்து செய்யப்பட வேண்டும் என்கிறோம் நாம்!"

—அறிஞர் அண்ணா

வலுவிருந்தால் வாக்கெடுப்பு நடத்து!

"இந்தக் காலத்திலே பழைய காலத்தில். மிரட்டியதைப்போல், இந்தியைப் புகுத்தி விடலாம் என்று கருதினால் அது பகற் கனவாக முடியுமே தவிர, நிச்சயமாக அது நடைபெறாது.

"வைதீகக் கல்யாணம்போல் அல்லவா அவர்கள் நடவடிக்கைகள் இருக்கின்றன? பெண்ணிடத்திலே ஒரு வார்த்தைகூடக் கேட்காமல், விடியற்காலையில் கணவனைக் கொண்டுவந்து உட்காரவைத்திருக்கும் நேரத்தில், அவன் ஒருகால் நொண்டியாக இருந்து சாய்ந்து சாய்ந்து வந்தால், மணப்பெண் கண்கலங்கி, 'என்ன, ஒருகால் இழுத்திருக்கும்போல் இருக்கிறதே' என்று தோழியிடத்திலே சொன்னால், 'இல்லை; வாழைப் பழத் தோலை மிதித்தார்' என்று பொய்பேசி, கழுத்திலே தாலி கட்டியதுபோல, நாங்கள் தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில்-தமிழர்கள் ஏமாந்திருந்த நேரத்தில்-உலகமெல்லாம் உன்னைக் கவனித்துக்கொண்டிருந்த நேரத்தில்-சனநாயகம் வளராத நேரத்தில்-எங்கள் தம்பி சம்பத் பார்லிமெண்டில் இல்லாத நேரத்தில்-தூங்குகின்ற நேரத்தில் உள்ளே நுழைந்த கள்வனைப்போல் நீ இந்தியைப் புகுத்தியிருக்கிறாய்; இப்பொழுது ஆண்மையிருந்தால் ஓட்டு எடு--இந்தி திணிக்கப்பட வேண்டுமென்று இந்தி பேசாத மக்கள் பகுதியிலே உனக்கு வக்கு இருந்தால்—வல்லமையிருந்தால் ஓட்டு எடு!

"காமராசருக்கு நல்ல வேளையாகப் பிள்ளை இல்லை. ஆகையால், அந்த வீட்டில், எனக்கு ஓட்டு கிடைக்காது. பக்தவத்சலம் வீட்டிலேயே எனக்கு ஓட்டு உண்டு; அவர் வீட்டுப் பிள்ளைகள் எனக்குத்தான் ஓட்டுப் போடுவார்களே தவிர, பக்தவத்சலத்துக்கு ஓட்டுப் போடமாட்டார்கள்!

—அறிஞர் அண்ணா

கொண்டிருக்கச் சொல்லுகிறேன்," என்று தேற்றினார் கவிஞர்.

முதலாளி அவசரமாக, "என்ன பாட்டு? என்ன பாட்டு?" என்று கேட்டார்.

கவிஞர் பாடிக் காட்டினார்.

"வேலூரு சேலை கட்டி
விழிநிறைய மையைத் தீட்டி
புதுச்சேரி ரவிக்கை போட்டு
—போதைக் கண்ணு
நீ புரண்டு உருண்டு போகிறாயே
—புரட்சிக் கண்ணு!"

பாட்டைக் கேட்டதும் முதலாளி விழுந்து விழுந்து சிரித்தார். முதலாளியின் மகளும் பலத்த கரகோஷம் செய்தபடி ஆசிரியரிடம் ஓடினாள். ஆசிரியரோ; பழைய பாட்டை முனகிக்கொண்டிருந்தார்.

"அய்யா ஆசிரியரே! உமக்கு புதிய பாட்டு தயாராகிவிட்டது. இந்தப் பாட்டை விட்டுவிட்டு அதைப் பாடும்!" என்ற அதிகாரக் குரல் கேட்டு ஆசிரியர் திரும்பினார். கவிஞர் பாடிய பாட்டை முதலாளியின் மகள் இனிமையான ராகத்திலே ஆசிரியரிடம் பாடினாள். ஆசிரியருக்கும் ஆனந்தம் தாங்கவில்லை. திருப்பித் திருப்பி புதிய பாட்டைப் பாட ஆரம்பித்தார்.

கவிஞர் முதலாளியிடம் விடைபெற்றுக்கொண்டு, பாட்டைப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக சிறு தொகை அன்பளிப்பும் பெற்றுக்கொண்டு கொல்லைப் புறமாக வெளியேறிவிட்டார். முதலாளி மகளுக்கும் நிம்மதி ஏற்பட்டு விட்டது. அப்பாவிடம் ஓடி, ஆசிரியர் திருந்திய செய்தியைச் சொல்லி மகிழ்ந்தாள்.

"என்னமோ போம்மா! இந்தக் கவிஞன் பாடுவதெல்லாம் பாட்டா? 'இவனுக்குப் பணம் ஒரு கேடா' என்று முன்பெல்லாம் வாயில் வந்தவாறு திட்டினேன். இப்போ இவன் பாட்டுக்கு நானே பணம் கொடுக்கும் காலம் வந்து விட்டது. எல்லாம் உன்னால் தானம்மா!" என்று தன்னைத் தானே நொந்துகொண்டார் முதலாளி.

ஆசிரியரோ, ஒரு கோப்பை தேநீரையும் அருந்தி விட்டு, "வேலூரு சேலைகட்டி..." என்ற மறுமலர்ச்சிக் கவிதையை பல்வேறு ராகங்களிலும் மாறி மாறி இசைக்கத் தொடங்கினார்.

அச்சுக் கோர்க்கும் தோழர்கள்கூட தங்கள் வேலையில் நாட்டமின்றி இசை கேட்டு திசை தடுமாறி நின்றனர்.

"அய்யர் வருகிறார், சார்!" என்று ஆபீஸ் பையன் ஆசிரியரின் காதைக் கடித்தான்.

உடனே ஆசிரியர் பாட்டை நிறுத்திவிட்டு......"வாருங்கள்; வாருங்கள்," என்று எதிர்கொண்டழைத்தபடி வாயிற் பக்கம் ஓடினார். பெருத்த சரீரம் படைத்தவரும், அந்த சரீரத்தில் திருநீறும் பூணூலும் அணிந்தவருமான திருவாளர் அய்யர் அவர்கள் ஆசிரியரை ஆசீர்வதித்தபடியே ஆசனத்தில் அமர்ந்தார்.

ஆசிரியர், பயபக்தியோடு அய்யரை நோக்கி, "எலக்ஷன் எல்லாம் எப்படி யிருக்கிறது? நம்ப ஆளுங்க எல்லாம் தங்களுக்கு உண்மையோடு தொண்டு செய்கிறார்கள் அல்லவா?" என்று வினவினார்.

"ஓ, பேஷாச் செய்ராள்! உங்க ஆளுங்க இல்லேன்னா இந்தத் தடவை 'டெபாசிட்' டே காலியாயிடும்! என்னமோ போங்க—எவ்வளவுதான் நீங்க அய்யர்களைத்திட்டினாலும் எலக்ஷன் டயத்திலே இப்படிக் கை கொடுக்கிறேளே; பகு பிரமாதம்! பகு பிரமாதம்! இதுதான் ஓய் அரசியல்! இப்படித் தானிருக்கணும் அரசியல் கட்சிகள்! உங்க அடுத்த வீட்டுக்காரன் இருக்கானே......"

"யாரு? முதலியாரா?"

"ஆமாம்...நீரும் முதலியார் தானே!...அதிருக்கட்டும்- அந்த முதலியார் எங்களவாளைத்திட்டுவதில்லை. ஆனால் பூணூல் இல்லாத பிராமணனோடுதான் சிநேகம் செய்வேன்னு உறுதியாச் சொல்ரான். நீர் என்னமோ அந்த முதலியாராட்டம் இல்லை. மிகவும் நல்லவர். பூணூல் இருந்தாலும் விபூதியிருந்தாலும் நாமமிருந்தாலும் பரவாயில்லை; போடு ஓட்டை அய்யருக்கு என்று துணிச்சலாச் சொல்றீர்!"

"என்ன சாமி செய்வது...... எங்க ஆளுங்ககூட சில பேர் எதிர்ப்பு இந்தக் கொள்கைக்கு!"

"அப்படியா? அப்ப உங்க கட்சி கலகலத்து விடுமே!"

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது! எலக்ஷன் முடிந்தவுடன் எங்க ஆளுங்களை வசப்படுத்த தந்திரம் இருக்கு சாமி, இருக்கு!"

"என்ன தந்திரமோ அது?"

"எல்லாம் உங்களுக்கு லாபகரமான திட்டம்தான்!"

"அப்படியா? என்ன அது?"

"ஓட்டுப் போட்டு உங்களைப் பதவியிலே உட்கார வைக்கிறோம் இப்போது! பிறகு உங்கள் ஓட்டல் வியாபாரம் விருத்தியாக ஒரு வழி செய்யப் போகிறோம்!"

"அப்படியா? பகு பிரமாதம்! பகு பிரமாதம்!! என்ன வழி?"

ஆசிரியர், அய்யரின் காதில் ரகசியமாக ஏதோ சொல்லுகிறார். அய்யர் ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்கிறார். இருவரும் கட்டித் தழுவிக் கொள்ளுகிறார்கள். ஆசிரியரின் கையில் ஏதோ ஒன்றை அமுக்கிவிட்டு அய்யர் புறப்படுகிறார்.

ஆசிரியர் கையை மூடிக்கொண்டே "பாத்ரூம்" பக்கம் போகிறார்.

கதை முடிந்தது!

என்னப்பா இது; கடிதம் எழுதுவாய் என்று எதிர்பார்த்தால் கதை எழுதி விட்டாய் என்று வியப்படைவாய் பொன்முடி நீ!

எழுதவேண்டாமென்றுதான் நினைத்தேன். ஏதோ எழுதி விட்டேன்! காரசாரமான கதைதான்! வழக்கத்திற்கு விரோதமான நடைதான்! அதனால் இந்தக் கதையை யாரிடமும் காட்டாமல் நீ மாத்திரம் படித்துவிட்டு மறைத்து விடு. அண்ணாவுக்குத் தெரிந்தால்கூட கோபிப்பார்.

அன்புள்ள,
நண்பன்

ஐயா, தீபத்தை அணைத்துவிடாதீர்கள்



மித்திரன் சித்திரம்! (24—10—57)

சோமநாதபுரத்துச் சிலை...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்து சிறிது கண்ணயருங்கள்,'' என்றாள்.

நிர்மலானந்தர் உண்மையிலேயே களைப்புடன்தான் இருந்தார். கட்டிலில் இறகுகளினால் தயாரிக்கப்பட்ட மெத்தையைப் போட்டு, பீதாம்பரங்களையும் இரத்தினக் கம்பளங்களையும் விரித்துப்போட்டாள். நிர்மலானந்தரும் போய்ப் படுத்துக் கண்களை மூடினார். இதயத்தின் ஆழத்தில் ஏதோ ஒன்று அவரைத் தூங்க விடாமல் அடித்துக் கொண்டிருந்தது. எண்ணங்கள் அலை அலையாக மோத நிர்மலானந்தர் படுத்திருந்தார்.

திடீரென்று வீணையிலிருந்து கிளம்பிய இன்னிசை காற்றில் கலந்து வந்து அவருடைய செவிகளில் பாய்ந்தது. லேசாகத் தலையைத் திருப்பிப் பார்த்தார். திலோத்தமா வீணையின் கம்பிகளை லாவகமாகமீட்டிக் கொண்டிருந்தாள். தன்னுடைய இதயத்தின் நரம்புகளை யாரோ தடவி இன்பகீதம் இசைப்பது போன்ற பிரமை சாதுவுக்குத் தோன்றியது. அழகும் இசையும் ஐக்கியப்பட்டு நிற்கும் அந்தக் காட்சி அவரைப் பரவசத்தில் ஆழ்த்தியது. அவரால் படுத்திருக்க முடியவில்லை; எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

''தூக்கத்தைக் கலைத்து விட்டேனா சுவாமி?''

''இல்லை; கலையும் அன்பும் ஒன்று கூடுமிடத்தில் சொர்க்கம் பிறக்கிறது என்று யாரோ சொன்னது என் நினைவிற்கு வந்தது; சொர்க்கத்தைப் பூரணமாக அனுபவிக்கலாமே என்று எழுந்து உட்கார்ந்து கொண்டேன்,'' என்றார் சாது.

அவள் பெருமூச்சு விட்டாள்.

''திலோத்தமா, உன்னை ஒன்று கேட்கப் போகிறேன்,'' என்றார் சாது.

''தாராளமாகக் கேளுங்கள்,'' என்றாள், அவள்.

சாது ஒருமுறை தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''விடியற்காலையில் பல்லக்கில் வீட்டுக்கு வந்தாய்; எங்கிருந்து வந்தாய் என்பதை நான் அறியலாமா......?''

திலோத்தமா சிறிது நேரம் சாதுவையே கூர்ந்து கவனித்தாள். பிறகு மெதுவாக ''சுவாமி, உங்களிடம் அதைச் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லி என் வேதனையைக் குறைத்துக்கொள்ளப் போகிறேன்! நான் சொன்னேனல்லவா நாங்கள் தேவதாசிகள் என்று; நாங்கள், பரம்பரையாகவே ஆலயத்திற்கு அடிமையாக்கப்பட்டவர்கள். இதோ, இந்த வீடும், இங்கேயுள்ள மதிப்புமிக்க பொருட்களும் ஆலயத்தின் அன்புப் பிச்சைதான். ராஜபோகம் அளிக்கப்பட்டாலும், எங்களுடைய வாழ்க்கை அடிமையிலும் கேவலமானது. நாங்கள் வெறும் விளையாட்டு பொம்மைகள். சோமநாதர் ஆலயத்தின் புரோகிதர்களுக்கு எங்களிடம் ஏகபோக உரிமையுண்டு......எங்களுடைய உள்ள உணர்ச்சிகள் உறைந்து போகும்படியான ஈன வாழ்க்கைதான், நாங்கள் வாழ்வது! பெண் ஜன்மத்தில் மிகவும் இழிந்த பிறவிகள் நாங்கள்! வாழ்க்கையின் கனவுகள் எங்களுக்கு வற்றிப்போன நீரூற்றுகள்......ஆறறிவு இல்லாத ஜீவன்கள்கூட, ஆணும் பெண்ணுமாக ஆனந்தமான குடும்ப வாழ்க்கை வாழ்கின்றன. அன்பு செலுத்த ஆதரவின்றி, லட்சியமற்றுக் கடலில் அலைக்கழியும் கப்பலாகி விட்டது எங்கள் வாழ்க்கை......சுவாமி, நீங்கள்தான் தர்மசாஸ்திரங்கள் நிறையக் கற்றிருப்பீர்களே... இந்த அவல வாழ்க்கையிலிருந்து மீட்சிபெற வழியே இல்லையா, சுவாமி?''

அவளுடைய இதயத்தின் வேதனை நீர்த் திவலைகளாக உருவெடுத்து, கண்ணீர் வெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. நிர்மலானந்தர் சிந்தனையில் மூழ்கியவராய், அப்பெண்ணின் முகத்தைப் பார்க்கத் தைரியமில்லாதவர்போல் வெறிச்சென்றிருந்த வான வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''...ஏன் சுவாமி மௌனமாக இருக்கிறீர்கள்? என் கதையைக் கேட்டபின், இவள் ஓர் எச்சில் பண்டம்தானே என்று ஏளனமாகக் கருதுகிறீர்களோ...''

''திலோத்தமா, பொன் பாத்திரத்திற்கு எச்சில் தீட்டுக் கிடையாது என்பதை நான் அறிந்திருக்கிறேன்... சோமநாதரின் புனித பூமியின் பயங்கரமான பல உண்மைகள் என்னை எங்கோ நீண்ட தூரமான எதிர்காலத்திற்கு இழுத்துச் செல்லுகிறது...வாழ்நாள் முழுதும் நான் கண்டு வந்திருக்கும் லட்சியக் கனவுகளுக்கு உன் சோக வரலாறு உயிரூட்டமளிக்கிறது...திராட்சை ரசத்தைப்போல, பெண்ணும் இங்கு ஒரு போதைப் பொருளாக—போகப் பொருளாக—கருதப்படுகிறாள்...மனித உணர்ச்சிகள் இங்கு மதிக்கப்படுவதே இல்லை. கலையும் மதமும் மனிதப் பண்பை உயர்த்தப் பயன்படவில்லை. ஒழுங்கீனத்தை வளர்க்கவே கருவிகளாக இருக்கின்றன...''

நிர்மலானந்தரின் பேச்சு வரண்டு கிடந்த திலோத்தமாவின் உள்ளத்திற்கு மழைபோல இருந்தது ''சுவாமி, நீங்கள் கூறியதெல்லாம்...இதோ, இந்த வீணையை சற்றுமுன் வாசித்ததைப்போல், இதுவரையில் நான் ஆத்மார்த்தமாக வாசித்ததே இல்லை......மதம், கலை போன்ற மனவுணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவைகள் மனத்தின் ஆழத்திலிருந்து அன்பின் அடிப்படையில் தோன்ற வேண்டும்.......சடங்குகளால் கட்டப்பட்ட மதமும், சடங்கின் சாயலாக வெளிப்படும் கலையும் ஜீவனுள்ளவைகளாக இருக்க முடியாது...... சுவாமி, தினமும் மாலையில் ஆடவும் பாடவும் ஆலயத்திற்குச் செல்லுகிறேன்.........கலை நிகழ்ச்சிகள் முடிந்தவுடன்...... சுவாமி, மனித உருவில் மதிப்போடும் புனிதக் கோலத்தோடும் உலவும் மனிதன் திரை மறைவில் எவ்வளவு பயங்கரமான மிருகமாக இருக்கிறான் தெரியுமா? காலையில் மீண்டும் வீட்டுக்கு வருகிறேன்......''—பேசிக்கொண்டே இருக்கும் பொழுது அவளுடைய தொண்டை கரகரத்தது. ''இந்த வாழ்க்கைக்கு விமோசனமே கிடையாதா சுவாமி?'' என்று கேட்டுக் கொண்டே நிர்மலானந்தரின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு 'கோ'வென்று அழுதாள் திலோத்தமா. வாஞ்சையோடு அவளை மார்புடன் அணைத்துக் கொண்டு தலைமயிரைக் கோதினார் சாது.

''அழாதே திலோத்தமா! அநீதி கட்டுமீறிச் செல்லும் பொழுதுதான் சாதாரண உண்மைகளைக்கூட மக்கள் சரிவர உணர ஆரம்பிக்கிறார்கள். புதிய சூழ்நிலை உருவாகி புதிய தலைமை பிறக்கிறது...கோட்டைக்கு வெளியே கஜினி முகம்மது கொட்டும் போர் முரசு, சோமநாதபுரத்தின் விடுதலை முரசு! சனாதன நெறியின் சாவுப் பறை! உன்னைப் போன்ற அபலைகளுக்கு அபயமளிக்கும் அன்பு முரசு!...''

கஜினியைப்பற்றி சாது கூறியதெல்லாம, திலோத்தமாவின் செவிகளில் விழவில்லை. சாதுவின் அன்பணைப்பில், மது வுண்டு மயங்கிய வண்டுபோல் துவண்டு கிடந்தாள். அவருடைய ஸ்பரிசம் இதுவரை அவள் அறிந்திராத புதிய இன்பமாக இருந்தது...

வெளியே தெருவில் தாரை தப்பட்டைகள் முழங்கின. கொம்புகள் 'பூம் பூம்' என்று ஒலித்தன. திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர்போல் அவளுடைய அணைப்பிலிருந்து விடுபட்டுப் புறப்பட்டார்.

''எங்கே போகிறீர்கள் சுவாமி?'' — அவள் ஏக்கம் தொனிக்கக் கேட்டாள்.

''திலோத்தமா, வாழ்க்கையில் எத்தனையோ நாட்டுப் பெண்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் சோமநாதபுரத்துப் பெண்களிடம் என்னவோ ஒரு விசேஷமான கவர்ச்சி இருப்பதைக் காணுகிறேன்...துறவி நிர்மலானந்தன் கட்டாயம் மீண்டும் உன் வீடுதேடி வருவான்......எப்பொழுது, எப்படி என்றெல்லாம் இப்பொழுது கேட்காதே! ஒரு புனிதமான கடமையை நிறைவேற்றவே சாது நிர்மலானந்தன் போகிறான் என்பதை மட்டும் நினைவில் இருத்திக் கொள்,'' என்று கூறிவிட்டு சாது வேகமாக வெளியே நடந்தார்.

கண் கலங்க அவர் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் திலோத்தமா. சாது கண்ணிலிருந்து மறைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் தாரை தப்பட்டைகள் முழங்க, பிணமொன்றைத் தெருவில் சுமந்து வந்துகொண்டிருந்தார்கள். பிணத்தின் பின்னே தலைவிரி கோலமாக ஓர் இளம் பெண் வந்துகொண்டிருந்தாள். சோகத்தின் மிகுதியால் அவளால் அழக்கூட முடியவில்லை; அவளுடைய கைகளில் குழந்தையொன்று இருந்தது! கணவனின் சிதையோடு அந்தப் பெண் உடன்கட்டை ஏறப்போவதாகப் பேசிக்கொண்டார்கள்! அந்தப் பெண்ணின் பரிதாப நிலையைக்கேட்டு திலோத்தமாவின் உள்ளம் அனலிடைப்பட்ட புழுவெனத் துடித்தது!

கழகம் வளர்ந்திட கடமையைச் செய்வீர்!

''நாம் எதிர்பாராத அளவுக்கு மலைபோல் வளர்ந்துவிட்ட நமது இயக்கம், நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இலட்சியத்தை அடைவதென்பது அதன் பின்னால் அணிவகுத்து நிற்கின்ற ஆயிரக் கணக்கானவர்களின் கையில்தான் இருக்கிறது.

''ஆகையினால்தான் வளர்ந்திருக்கின்ற இந்த இயக்கம் சிதறுண்டு போகாமல் இதனுடைய முழுப் பலனை நாம் அடையவேண்டுமென்றால், தி. மு. கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்களும்—தி. மு. கழகத்திற்கு ஆதரவு காட்டுகிறவர்களும்—தி. மு. கழகக் கருத்து உண்மையிலேயே நாட்டுக்குத் தேவைதான் என்று உள்ளூர எண்ணுகிறவர்களும் தங்களுடைய வருவாயிலே—தங்களுடைய அறிவிலே — தங்களுடைய ஆற்றலிலே—தங்களுடைய உழைப்பிலே—தங்களுடைய நேரத்திலே—தங்களுடைய அன்பிலே சிறுசிறு பகுதிகளை—துளித் துளிப் பகுதிகளை தி. மு. கழகத்திற்கென்று உரியதாக்கிவிட வேண்டும்.

''பணமில்லாதவர்கள்—பண்பு அதிகம் பெற்றவர்கள்—பணம்பெற முடியவில்லையே என்ற கவலையிலே இருப்பவர்கள் — பணமில்லாத காரணத்தாலே, 'நாங்கள் என்ன செய்யலாம்?' என்று அவர்கள் கவலைபபடத் தேவையில்லை. தி. மு. கழகம் பணத்தால் மட்டும் வளர்ந்த கட்சியல்ல. நாம் தனிப்பட்ட முறையிலும் வளர்ந்திருக்கிறோம்.

''மாற்றாருடைய மனம் வெடிக்காமல் இருக்க வேண்டுமானால், உண்மையிலேயே நம்முடைய வளர்ச்சி இதற்குமேலே இருக்காது என்று தெரிந்தால்தான், அவர்கள் ஆயாசத்தை அடக்கிக் கொள்ளுவார்கள்; இல்லாவிட்டால் மெத்த வருத்தப்படுவார்கள்.

''எனவே, இன்று முதலே, நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன், தி. மு. கழக வளர்ச்சிக்கேற்ற வகையில் நீங்கள் உங்கள் அறிவையும் ஆற்றலையும், உங்களுடைய நேரத்தையும் நினைப்பையும், உங்களுடைய செல்வத்தையும் உழைப்பையும் ஒவ்வொரு சிறு கூறு—ஒவ்வொரு சிறு பகுதி இன்று முதலே ஒதுக்கி வைக்க வேண்டும்.''

—அறிஞர் அண்ணா

சுழல் விளக்கு . . .

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

நீம் இதர இடங்களில் இந்தியாவுக்கு எதிராக, அவை சதியில் ஈடுபடுவதாகக்கூட குற்றச்சாட்டுகள் எழும்பியுள்ளன: அப்படிப்பட்ட நாடுகளைக்கொண்ட காமன்வெல்த்தில் நாம் உறுப்பினராயிருக்கும்போது, பிறர் நம்மீது திணிக்காத நிலையில் ஆங்கிலத்தை நாம் வைத்துக்கொள்வதற்குத் தடை என்ன?

"காமன்வெல்த் உறவு வேண்டாம் என்று முடிவு செய்துவிடுவார்களேயானல், அப்போது நான், இந்தி கூடாது—ஆங்கிலம்தான் வேண்டும் என்பதற்கும் புதிதாக வாதங்களைச் சொல்லுவேன்—காமன்வெல்த் உறவை விட்டுவிட்டால்," நான் ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லுவதாக ஆகிவிடாது. ஆனல் அதற்கிடையில், காமன்வெல்த் உறவை வைத்துக் கொண்டிருக்கையில், ஆங்கிலத்தை வைத்துக்கொள்வது இந்தியாவின் கௌரவத்திற்கு இழுக்கு என்ற வாதம் என்னைத் திருப்திப்படுத்த முடியாது.

"பிரிட்டிஷ் அரசரையோ, அரசியையோ காமன்வெல்த் தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பதில் இல்லாத மானக்கேடு, ஆங்கிலத்தை வைத்துக் கொள்வதில் வந்து விடுமா?"

—இது போன்ற கேள்விகள் பிறப்பதற்குக் காரணமாக இருந்தவரே, இப்போது கேள்விகளைத் தானே கேட்டுக்கொண்டு பதில் சொல்லுகிருர்; ஆவேசமான—அர்த்தமுள்ள பதிலைச் சொல்கிருர்!

ஆங்கிலத்தின் அவசியம்!

"ஆங்கிலத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் 'சில தேசியத் தோழர்கள்—தங்களுடைய தேசியம் முற்றி விட்ட காரணத்திலே என்று நான் கருதுகின்றேன்—சொல்லுகின்றார்கள்—'ஆங்கிலம் அன்னிய மொழி; ஆகவே, ஆங்கிலம் ஆகாது" என்று!

"அன்னியருடைய வழிகளெல்லாம் நமக்குத் தேவையில்லையென்ருல், இரயில அன்னியன் கொடுத்ததுதான்; கார்டு, கவர்களை அன்னியன் காலத்திலேதான் பார்த்தோம்; தபால்—தந்தி அன்னியன் காலத்திலேதான் கிடைத்தது; ஆபரேஷன், இஞ்செக்ஷன் அன்னியன் காலத்தில் வந்தவைதான். இவைகளெல்லாம் இருக்கலாம்—ஆனல், அவர்களுடைய மொழி மட்டும் இருக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்வது எந்த வாதம் என்பது எனக்குப் புரியவில்லை.

"ஆகையினலேதான், ஆங்கிலத்தை அன்னிய மொழி என்று கருதாமல், அன்னியரோடு தொடர்புபடுத்துகின்ற மொழி—என்று கருதுகிற காரணத்தால் நாம் அதை விலக்க முடியாது."

—அறிஞர் அண்ணு

வெள்ளைக்காரனுக்குப் பணிந்து கொடுக்கும் காமன்வெல்த்தில் ஓர் அங்கமாக இருக்கும்போது அவன் மொழியை உபயோகிப்பதில் தவறு என்ன இருக்க முடியும் என்று கேட்கிருர்!

இதற்கும் சில இந்தி வெறியர்கள் பதில் சொல்லத் தயாராயிருக்கிருர்கள் :

"ஏது; இந்த இந்தி எதிர்ப்பாளர்களின் தொல்லை சகிக்க முடியவில்லையே! இவர்கள் அபிலாட்சையையும் தடுப்பானேன்? சரி; இவர்கள் இஷ்டப்படியே இந்தியைப் பொது மொழியாக்கும் பிரச்சினையை இப்போது ஆராய்ந்து தீர்ப்பு கூற வேண்டாம். இந்திக்குத் தேதி குறிக்கும் விஷயத்தை அப்படியே ஒத்தி வைத்து விடுவோம்!"

இப்படி முழங்குகிருர்கள்; இந்தி வெறியர்கள், சிலர்!

இந்தி பொது மொழியாவதை ஒத்தி வைப்பதா? அது ஏன் என்று கேட்டு; அவர்களுக்கும் தக்க பதில் தருகிருர் ஆச்சாரியார்:

"பிரச்சினையை இன்றே சந்தித்து ஒரு முடிவு காணுவதை விட்டுவிட்டு, 'இந்தி இன்றைக்கு வேண்டாம்; பிறிதோர் நாள் ஏற்றுக் கொள்ளலாம் என எதிர்காலத் தேதி நிர்ணயம் செய்வது முறையானது அல்ல; ஏனெனில், அந்தத் தேதி நெருங்கும்போது, நாம் சந்திக்க வேண்டியிருக்கும் கஷ்டங்கள் பின்னும் அதிகமாகும். கஷ்டங்களுக்கும் அப்பால், அந்த ஏற்பாட்டில் நீதியும் இல்லை, ஏனெனில், நாம் நமது சவுகரியத்தை மட்டும் கவனித்துக் கொண்டோம் என்ற குற்றத்திற்கு, அந்தத் தியாகிளை எதிர்காலச் சந்ததிக்கு விட்டுவிட்ட குற்றத்திற்கு ஆளாவோம்.

"இந்தி இந்தியாவின் ஒரே கட்சி மொழியாக்கப்படுவது, இந்தி பேசாத மக்களுக்கு நிரந்தரமான பிரதி கூலம் செய்வதாகும் என, இந்தி வெறியர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எச்சரிக்கை தர விரும்புகிறேன்"

—எச்சரிக்கை தருகிருர், ஆச்சாரியார்!

இந்தி பொது மொழியாக்குவதை எதிர்க்கும் ஆச்சாரியார் பள்ளிகளில், இந்தி கட்டாயப் பாடமாக்குவதுபற்றி என்ன கூறுகிருர்?

அதுதான் வேடிக்கை!

இந்திக்குப் பொதுமொழியாக இருக்கும் தகுதியில்லை!

அதனல் இந்தி பேசும் மாநிலத்தவர்களுக்குத்தான் லாபம்!

அது பிராந்திய மொழிகளுக்கு நன்மை செய்யாது! அதற்கு ஆங்கிலமே பொதுமொழியாக இருப்பது எவ்வளவோ மேல்! அதனல் அவமானம் ஒன்றுமில்லை.

—அப்படிப்பட்ட இந்தியை—இந்திய உபகண்டத்திற்குப் பொது மொழியாக இருப்பதற்கு எந்த விதத்திலும் தகுதி பெற்றிருக்காத இந்தியை—நம் நாட்டு மாணவர்கள் மட்டும் பள்ளிகளிலே ஏன் கட்டாயப் பாடமாகப் பயில வேண்டும்?

—ஆச்சாரியார் இது பற்றியும் மீண்டும் சிந்தித்து; தெளிவான கொள்கையைக் கொள்வதுதான் அவரது அறிவுக்கு அழகு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிருேம்!

காலம் மாறிப் போச்சா ?



துரோணரின் துரோகம்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏன் இவனை உயர்ந்த சாதிக் காரன் வீட்டுக்கு அனுப்ப வில்லை?

காட்சி: 3

[காட்டிலே துரோணரும், அரசகுமாரர்களும் கூடாரங்கள் அமைத்துக் கொண்டு தங்கியிருக்கிறார்கள். துரோணரின் கூடாரம் தனியாக இருக்கிறது. மாலை நேரம்; துரோணர் கூடாரத்தை விட்டு வெளியே வந்து உலவிக் கொண்டிருக்கிறார்.]

துரோணர்: அர்ச்சுனா! என்ன விஷயம்? நீ வருத்தமாகக் காணப்படுகிறாயே! இன்று வேட்டையில் ஒன்றும் கிடைக்கவில்லையா? துரியோதனனுடனோ அல்லது வேறு யாருடனாவது சண்டை போட்டாயா?

அர்ச்சுனன்: குருநாதா! மன்னித்துக் கொள்ளுங்கள்! நான் உங்களுடைய மாணவனாக இருக்கத் தகுதியில்லாதவன்!

துரோணர்: என்ன? நீ என்ன கூறுகிறாய்? உலகிலேயே எனக்கு ஒரே ஒரு மாணவன் தான் உண்டு; அவன்தான் அர்ச்சுனன்! உலகிலேயே சிறந்த 'வில்வேந்தன்' அர்ச்சுனன்தான்!

அர்ச்சுனன்: இல்லை குருதேவ், இல்லை! அர்ச்சுனன் வில் வேந்தனல்ல! அவனால் வில் வேந்தனாகவும் முடியாது!...

துரோணர்: என்ன வார்த்தைகள் கூறுகிறாய்? என் கண்ணே! என்ன நடந்தது? கூறு! உலகிலே உன்னைத் தோற்கடிக்க வேறு யாருமே கிடையாதே!

அர்ச்சுனன்: அந்த நாள் மறைந்து விட்டது! காலம் மாறி விட்டது! இங்கிருந்து ஆறு கல் தொலைவிலே ஒரு பில் சாதி இளைஞன் இருக்கிறான்...!

துரோணர்: பில் ஜாதிக்காரனா? காட்டுமிராண்டி!

அர்ச்சுனன்: குருதேவ்! பில் ஜாதிக்காரன்! அவன் நம்முடைய வேட்டை நாயின் வாய் முழுவதையும் அம்புகளால் அடைத்து, நாயைக் குரைக்க விடாமல் செய்து விட்டான்! ஆனால் நாய்க்கு சிறிது காயம் கூட ஏற்படவில்லை!

துரோணர்: இல்லை; இது நடக்க முடியாத காரியம் அர்ச்சுனா!...

அர்ச்சுனன்: ஆனால் இது உண்மை குருதேவ்! அதுவும் அவன் துரோணரின் மாணவன்!

துரோணர்: என்னுடைய மாணவனா?...பில்...எனக்கு நினைவே வரவில்லையே!... நான் அவனைப் பார்க்க விரும்புகிறேன்!

அர்ச்சுனன்: அவன் தங்களைச் சிலை செய்து வைத்து, அதன் முன்னால் வில் வித்தைக் கற்று வருகிறான்!

துரோணர்: நானே என்னை அவனிடம் அழைத்துச் செல்!

காட்சி: 4

[காட்டில் ஒரு குடிசை; குடிசையின் முன்னால் தாய்மையான ஒரு மைதானம். மைதானத்தின் மூலையிலே மண்ணால் செய்யப்பட்ட அழகிய துரோணரின் சிலை! அந்தச் சிலையின் கழுத்தில் மலர் மாலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஏகலைவன் அம்பு விடுவதில் அப்படியே லயித்திருக்கிறான். அவன் பின்புறமாக துரோணர், பீமன், அர்ச்சுனன் மூவரும் வருகிறார்கள்.]

பீமன்: இவன்தான் அந்த பில் இளைஞனா?

துரோணர்: இவன்தானா?...... அது என்ன? அது என் சிலை மாதிரி இருக்கிறதே! வாருங்கள்; அவனருகில் செல்வோம்!

ஏகலைவன்: (திரும்பி ஆச்சரியத்துடன்) யாரது?...குரு... து...ரோ...ணாச்...சார்...யாரா? (துரோணரின் காலில் விழுந்து வணங்குகிறான்.) எல்லாம் உங்கள் பாதார விந்தங்களின் கருணைதான் பிரபோ!

பீமன்: நீ துரோணாசார்யாரை உன்னுடைய குருவாக மதிக்கிறாயா?

அர்ச்சுனன்: முன்னால் பார்க்க வில்லையா? இதில் என்ன கேட்பதற்கு இருக்கிறது?

துரோணர்: நல்லது; இப்போது நீ இந்த வித்தையில் சிறந்த வனாகி விட்டாய்! நான் தொலைவிலிருந்தே, நீ அம்பு விடுவதைப் பார்த்துக் கொண்டு இருந்தேன்!...

ஏகலைவன்: இல்லை தேவ்! என்னுடைய தவம் இன்னும் முடிய வில்லையே!

துரோணர்: ஆனால்... குரு என்று ஒப்புக்கொள்வதினால் நான் உன் குருவாகி விடமாட்டேன்! குரு தட்சிணையும் கொடுக்க வேண்டுமே!

பீமன்: பின் என்ன?

ஏகலைவன்: குருதேவ! தங்களுக்கு நான் என் உயிரையே அர்ப்பணிக்கக் காத்திருக்கிறேன்! இந்தத் தலையை வெட்டி தங்கள் காலடியில் வைக்கட்டுமா? நானோ ஏழை! என்ன செய்ய இயலும்?

துரோணர்: (அர்ச்சுனனை பார்த்துக்கொண்டே) அப்படியானால்...குரு தட்சிணையாக உனது வலதுகையின் கட்டை விரலை நான் கேட்டால்...?

பீமன்: ஆமாம்!...பார்க்கலாம் இவன் குருபக்தியை!

(ஏகலைவனைப் பார்த்து மூவரும் சிரிக்கிறார்கள். ஏகலைவன் அப்படியே பிரமித்து நிற்கிறான்.)

ஏகலைவன்: உண்மையிலேயே கேட்கிறீர்களா?

பீமன்: ஆமாம்! பின்னே விளையாட்டென்று நினைக்கிறாயா?

ஏகலைவன்: அப்படியானால்... ('சடக்'கென கட்டாரியை எடுத்து வலது கைக் கட்டை விரலை வெட்டி) இதோ... எடுத்துக் கொள்ளுங்கள்!... (கட்டை விரலை துரோணருடைய கால்களில் வைக்கிறான். கைகளிலிருந்து இரத்தம் பெருகுகிறது. முழங்கா லிட்டு உட்கார்ந்து கொள்கிறான்.) குருதேவ்...(இரத்தத்தால் துரோணரின் கால்கள் நனைகின்றன.)

துரோணர்: (பிரமித்துப் போய் துள்ளிக் குதித்து).... ஏ-க-ல-வ்-ய.... நீ என்ன செய்து விட்டாய்?...என்னுடைய விளையாட்டு!...அட...... கடவுளே! என்ன நேர்ந்து விட்டது!

(அப்பொழுது பில் சர்தார் அங்கு வருகிறார். பீமன், அர்ச்சுனன் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்...துரோணர் பிரமித்தவராய் நிற்கிறார்.)

பில் சர்தார்: இது என்ன? ஏகலவ்யா? இங்கு இந்த இரத்த ஆறு ஏது? அட! இவர்கள் யார்? (துரோணரை அடையாளம் கண்டு கொண்டு) தாங்கள்தான் துரோணாச்சார்யாரா?...ஆனால் இங்கு என்ன நடந்தது?

ஏகலைவன்: (நின்று கொண்டு காயத்தை இடது கையால் அமுக்கிப் பிடித்துக்கொண்டு) ஒன்றுமில்லை அப்பா! இந்தக் கட்டை விரலை குருதட்சிணையாகக் கொடுத்தேன்!

பில் சர்தார்: கட்டை விரலை, குருதட்சிணையாகவா? இவர் குருவா? அல்லது கொடும் புலியா?

துரோணர்: பில் சர்தார்.,..

பீமன்: அட; குரு தமாஷ் செய்து கொண்டிருந்தார்! இவன் என்னடாவென்றால் உண்மையிலேயே கட்டை விரலை வெட்டி விட்டான்!

பில் சர்தார்: ராஜகுமாரா! பேசாதே! காட்டுமிராண்டிகளும் தமாஷைப் புரிந்து கொள்வார்கள்! ஆனால் பிராமண குரு—தாங்கள் என்ன செய்து விட்டீர்கள்? உயர்ந்த சாதியில் பிறந்துவிட்டு, மிகவும் கீழ்த்தரமான செயலைச் செய்து விட்டீர்களே! நம்பிக்கைத் துரோகம்! ஓ, ஆகாயம் அப்படியே இருக்கிறதே! குரு! உங்களுடைய சாஸ்திரமும், உங்களுடைய தர்மமும் இதைத்தான் கற்பிக்கிறதா? நீங்கள் என்னுடைய குழந்தையின் எல்லா தவத்தையும்

[தொடர்ச்சி பக்கம்—12]

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் பெரும் பொறுப்பை உன் தலையில் சுமத்தி இருக்கிறது," என்ற அந்த மனிதரின் குரல் கூட அவன் காதுகளில் விழ வில்லை. அவன் தலை தெறிக்க ஓடிக்கொண்டிருந்தான்.

★

கடமையே பெரிதென மதிப்பவனுக்கு இருளோ-மற்ற தடைகளோ பெரிதாகவா இருக்க முடியும்? காற்றாகப் பறந்து சென்ற கிங்-சௌ எந்த இடையூறையும் லட்சியம் செய்யாமல் கொரில்லாத் தலைவனிடம் போர்த் திட்டம் புதைந்து கிடந்த கடிதத்தைச் சேர்ப்பித்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

ஆனால் அந்த நள்ளிரவில் மலைப் பாறைகளுக் கிடையில் மர்ம உருவமாக நடை பயின்று கொண்டிருந்த அவனை இருட்டு மதி படைத்த ஜப்பானிய சிப்பாய்கள் கண்டுபிடித்துவிட்டனர். 'கொரிலலாப் படை'யைச் சேர்ந்தவனாக இருக்கலாம். அவன் என்று நினைத்த அவர்கள் அவனைப் பின் தொடர்ந்து வந்தனர். அதைப் புரியாத கிங்-சௌ புதருக்கருகில் தனக்குப் புது வேலை தந்து அனுப்பிய மனிதரை தேடிக்கொண்டு ஓடோடி வந்தான்.

"ஐயா! ஐயா!......நீங்கள் கொடுத்த போர்த் திட்டக் கடிதத்தைக் கொரில்லாத் தலைவனிடம் தந்துவிட்டேன் ஐயா!... நீங்கள் பயந்தீர்களே; என் பணி வெற்றிகரமாக முடிந்து விட்டது!..." என்று கத்தினான்.

அவன் கூறியதை அந்த மனிதர் கேட்கவில்லை; ஆனால் பின்னால் வந்த ஜப்பானிய சிப்பாய்கள் கேட்டுவிட்டனர்.

மறுகணம் அவன் முன்னால் பாய்ந்த ஒரு கொடிய நெஞ்ச ஜப்பானியனின் துப்பாக்கி முனை அந்தச் சிறுவனை நோக்கித் திரும்பியது. 'டுமீல்' என்ற பயங்கர சப்தத்தைத் தொடர்ந்து "ஐயோ!" என்ற சிறுவனின் அவல ஒலியும் மலைப் பாறைகளில் மோதி எதிரொலித்தது.

சிறுவன் கீழே விழுந்தான்!

ஆடுகள் மிரண்டு ஓடின!

ஜப்பானியர் சிரித்துக் கொண்டே நடையைக் கட்டினர்!

சூரியன் எழும்பினான்!

இரத்த வெள்ளத்தில் கிடந்த சிறுவன் தன் கையில் ஏதுவோ தட்டுப்படவே என்னவென்று நோக்கினான். இரவு அவனிடம் கடிதம் தந்த அந்த சீனக்காரனின் உருவம்தான் அங்கே கிடந்தது. ஆனால், இப்போது அந்த உருவத்திலே உயிர் இல்லை!

மெள்ள அந்த உருவத்தின் முகத்தைத் தூக்கிப் பார்த்தான், கிங்-சௌ. மறுகணம் அவன் தலை சுழன்றது. "ஐயோ! அப்பா!" என்றலற எழும்பிய அவனது குரல் தொண்டைக் குழியுடனேயே நின்றுவிட்டது. அதேகணம் அவன் மார்பிலே பாய்ந்திருந்த குண்டு தன் கடமையைச் செய்து விட்டது— அவன் தலை சாய்ந்தது!

ஆனால், தாயகத்திற்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்த அந்த வீர பரம்பரையின் புகழ் இன்று வரை சாயவில்லை— நிலைத்து நிற்கிறது!

1-11-57 முதல்
'முரசொலி'யின்
★ புதிய சந்தா விகிதம் ★
உள்நாடு
ஆண்டு சந்தா 8—00
ஆறு மாதம் 4—50
வெளிநாடு
ஆண்டு சந்தா 9—00
ஆறு மாதம் 5—00

★ சீனக் கதை ★

மானம் காத்த
★ மாவீரன் ★

கிங்—செளவை உங்களுக்குத் தெரியுமா? தெரியாது என்றுதான் நினைக்கிறேன். அவன் என்ன; பணக்காரன் வீட்டுப் பிள்ளையா—அல்லது குதிரைச் சவாரி செய்யும் அரசாங்க அதிகாரியின் மகனா; எல்லோருக்கும் தெரிந்திருக்க? அல்லது சீனாவிலுள்ள சிறுவர்கள் அத்தனை பேரையும் நம்மால் தெரிந்து வைத்துக் கொள்ளத்தான் முடியுமா?

அவன் மிக மிகச் சாதாரணமான சிறுவன். ஆனால் அவன் சொற்படி அடங்கி நடக்க சில 'உயிர்'களும் இருந்தன. கையிலே நீண்ட பிரம்பொன்றை எடுத்துக் கொண்டு—'ஹை... ஹை...' என்று அவன் குரல் எழுப்பினால், நடு நடுங்கி ஓடும் அவனது ஆட்டு மந்தை!

அந்த வட்டாரத்து மலைக் குன்றுகள் அனைத்தும் அவனுக்குத் தெரியும். ஆடுகளை ஓட்டிக் கொண்டு அவன் குன்றுப் பக்கம் சென்று விட்டால் யாரும் அவனைக் கண்டு பிடிக்க முடியாது. அவன் காட்டு ராஜா!

ஜப்பான் தேசத்தவர் சீனாவினுள் புகுந்து அப்போதைக்கப்போது அட்டகாசம் செய்து கொண்டிருந்த காலமது! திடீரென்று ஊருக்குள் நுழைவார்கள்; கிராம மக்களைப் பிடித்து வதைப்பார்கள்; உதைப்பார்கள்; பணியாதவரைச் சிறை பிடிப்பார்கள்; சென்று மறைவார்கள்! ஆனால் அப்படி ஏதாவது ஒரு நிலை கிங்—செளவின் கிராமத்தில் ஏற்பட்டால்கூட அவன் கவலைப்படமாட்டான். குன்றுக் காடுகளில் அவன் புகுந்து விட்டால், ஜப்பான்காரர்களின் கழுகுக் கண்கள் அவனைக் கண்டு பிடிக்கவே முடியாது!

இப்போது அந்த ஆடுகள்தான் அவனுக்கு மிகவும் நெருங்கியவை — சுற்றத்தார் போல! அப்படி என்றால் அவனுக்கு அப்பா — அம்மா இல்லையா — என்கிறீர்களா? இல்லைதான்; ஆனால் இரண்டு பேரையுமே அவன் சாவுக்குப் பலி கொடுத்து விடவில்லை! அம்மாவோ அவன் நினைவு தெரிவதற்கு முன்னால்—பச்சிளஞ் சிசுவாக இருந்த நேரத்திலேயே இறந்து விட்டாள்! அப்பா...? அவர் எங்கே என்று அவனுக்கே தெரியாது! ஒருநாள் இரவு திடீரென்று அவர் காணாமல் போய் விட்டார்!... இருவரும் ஒன்றாகத்தான் சாப்பிட்டார்கள்; ஒன்றாகத்தான் 'படுக்கைக்குச் சென்றார்கள்; ஜப்பான்காரர்கள் தரும் தொல்லைகளை வருத்தத்தோடு சொல்லிக் கொண்டிருந்தார் அவர்; அவர்களை எதிர்க்க சீனக்காரர்கள் அமைத்திருக்கிற 'கொரில்லாப் படை'யைப் பற்றியும் கதை கதையாகச் சொன்னார்; "நாட்டைத் துரோகிகளிடமிருந்து காக்க எல்லோரும், எந்த நேரமும் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்" என்றும் ஆவேசத்தோடு சொன்னார்! ஆனால் அவரைத்தான் விடிந்தவுடன் படுக்கையிலே காணவில்லை!

கிங் — செள தடுமாறிப் போனான்; தத்தளித்தான், புயலில் சிக்கிய சருகுபோல்! என்ன பலன்?... அவன் கதறலும் துடிதுடிப்பும் பயனற்றுப் போயின! அப்பா ஆடு மேய்க்கும் தொழிலைத்தான் அவனுக்கு விட்டுச் சென்றிருந்தார்!

"அப்பா! நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்?"

கிங்—செளவின் அந்தக் கதறல் மலைக் குன்றுகளில் மோதி எதிரொலித்ததே தவிர, எந்த பதிலும் கிடைக்கவில்லை! அவரது மறைவு அன்று வரை மர்மமாகவே போய் விட்டது!

●

ஒரு நாள்...

மாலை மங்கிக் கொண்டிருந்தது. ஆடுகளை ஓட்டிக் கொண்டு கிராமத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தான் கிங்—செள.

அப்போது அவன் சற்றும் எதிர்பாராத வண்ணம் ஏதோ ஒரு சிறு ஓசை பின்னால் எழும்பியது.

கிங்—செள திடுக்கிட்டுவிட்டான். தன்னுடைய ஆடுகள் ஏதேனும் வழி தவறி ஓடுகின்றனவோ என்று எண்ணிப் பார்த்தான். பதினேழு ஆடுகள்—சரியாகத்தான் இருந்தன. அப்படியென்றால்......அது என்ன ஓசை?

கிங்—செள காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான். உற்று கவனித்தான். அப்போது யாரோ வேகமாக ஓடி வரும் காலடியோசை தெளிவாகக் கேட்டது.

கிங்—செள பயப்படவில்லை —இருந்தாலும் அவன் வழக்கத்திற்கு மாறான ஏதோ ஒரு நடக்கக் கூடாத நிகழ்ச்சியைச் சந்திக்கப் போகிறான் என்பதை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. அந்த மர்மமான காலடி ஓசையும் அருகில் நெருங்கிக் கொண்டிருந்தது.

"யார் அங்கே?..."

கிங்—செள உரக்கக் கத்தினான். அவன் குரல் மலைப்பாறைகளில் மோதி எதிரொலித்தது. ஆனால் பதில் கிடைக்கவில்லை.

நன்றாக இருட்டி விட்டது. அந்தக் காலடியோசையோடு, இப்போது இலேசான முனகல் ஒலியும் சேர்ந்து எழும்பியது. இப்போதுதான் கிங்—செளவின் உள்ளத்திலும் லேசாக பயம் தலைகாட்டத் துவங்கியது.

வந்துகொண்டிருப்பது யார்? கிராமத்து ஆசாமியா? அல்லது இருளின் துணையோடு தாக்க வருகின்ற எதிரியா? கிங்-செள எதையும் தீர்மானிக்கமுடியாதவனாய் சிறிது நேரம் சிலைபோல் நின்றான். மறுகணம் பக்கத்திலிருந்த புதருக்குள் மறைந்து கொண்டான்.

காலடியோசை புதரை நெருங்கிவிட்டது. தலையைக் கெட்டியாகப் பிடித்த வண்ணம் தடுமாறித் தடுமாறி வந்துகொண்டிருந்த ஒரு மனித உரு, புதருக்கு அருகில் வந்ததும், "ஐயோ" என்ற ஈனக் குரலுடன் 'தடால்' என்று கீழே விழுந்தது.

கிங்-செள பாய்ந்தோடினான். அந்த உருவத்தின் அருகில் மண்டியிட்டு அமர்ந்துகொண்டு யாரெனக் கவனித்தான். இருளில் முகம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் உடையைக் கொண்டும், அந்த உருவின் வாயிலிருந்து எழும்பிக்கொண்டிருந்த சீன மொழியைக் கொண்டும்—எதிரி எவருமல்ல என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

"ஐயா...யார் நீங்கள்?..."—விழுந்து கிடப்பது தன்னைப் போன்ற ஒரு சீனக்காரன்தான் என்பதைத் தெரிந்ததும், அவன் குரலில் இப்போது புதிய பரிவு தோன்றியது!

"தம்பி...நீ ஜப்பான்காரன் இல்லையே?..."– கிணற்றுக்குள்ளிருந்து எழும்புவது போலக் கேட்டது அந்த மனிதனின் குரல்.

"இல்லை ஐயா! நான் பக்கத்துக் கிராமத்துச் சிறுவன்தான்!...அதிருக்கட்டும்; நீங்கள் யார்? உங்களுக்கு என்ன நேர்ந்தது?...ஆ, ஐயையோ! இது என்ன? மண்டையிலிருந்து இரத்தம் கசிகிறதே! சீக்கிரம் சொல்லுங்களேன், நீங்கள் யார்?..."

கிங்-செளவின் குரலில் எங்கிருந்தோ படபடப்பு வந்து புகுந்துகொண்டது!

"நான் யார்?...இந்தக் கேள்விகளுக்கெல்லாம்......இப்போது விடை தருகின்ற நேரமல்ல தம்பி!...நீ ஒரு காரியம் செய்வாயா?...எனக்காக அல்ல; உன் நாட்டுக்காக...செய்வாயா?..."

கிங்-செளவுக்கு ஒன்றும் விளங்கவில்லை! "என்ன செய்ய வேண்டும் ஐயா?" என்றான்.

"தம்பி!...நான் என் தலைமேல் சுமந்து சென்று கொண்டிருக்—என் உயிரினும் மேலான பொருள் ஒன்றை உன்னிடம் ஒப்படைப்பேன்!...அதை நீ இங்கிருந்து நான்கு மைல் தொலைவில் இருக்கிற அந்த மலைப் பள்ளத்தாக்கு—அங்கே பதுங்கியிருக்கும் 'கொரில்லாப் படை'த் தலைவனிடம் சேர்ப்பித்துவிட முடியுமா?..."

"எப்போது?..."

"இப்போதே!......நான் வேறொரு கொரில்லா முகாமைச் சேர்ந்தவன்! நாளைய தினம் இங்கு ரகசியமாக படையெடுத்துவருகின்ற ஜப்பானியச் சேனையைத் திடீரென்று தாக்குவதற்கான திட்டம்தான்—கடித ரூபத்தில் என்னிடம் இருக்கிறது! அதைச் சுமந்து சென்ற நான்தான் பாறையொன்றில் இடறி—மலைக் காட்டிலே உருண்டு—இதோ, உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கிறேன்! என் பணி நடைபெறாவிட்டால் நாளைய தினம் நம்மவர்களின் போர்த் திட்டம் நடைபெறாது—எதிரிகள் புகுந்து சூறையாடிவிடுவர்..."—அதற்கு மேல் அந்த மனிதரால் பேச முடியவில்லை. நாத்தடுமாறியது!

"ஐயா! இப்படி ஒரு பொன்னான வாய்ப்பு கிடைக்காதா என்றுதான் நான் காத்துக் கிடக்கிறேன்!...தாருங்கள் கடிதத்தை, என்னிடம்!..."—துடிதுடித்தான் கிங்-செள.

"தம்பி!......அந்தக் கடிதம் சாதாரணமானதல்ல! இந்தச் சுற்று வட்டாரத்திலே வசிக்கின்ற ஆயிரக் கணக்கான மக்களின் உயிரை—அதற்கும் மேலான நாட்டின் மானத்தைக் காப்பாற்றும் இலட்சிய வரிகள் அவை!...உன்னை நம்பலாமா?..."—அந்த மனிதரின் குரல் தடுமாறியது!

"நான் பிறந்து வளர்ந்த நாட்டின்மேல் ஆணை ஐயா!"

"ஐயோ...தம்பி...திரும்பும் திசையெல்லாம் ஜப்பானிய ஒற்றர்கள்!...உன் தலை தெரிந்தால் அதற்கு விலை பேசிவிடுவார்கள்!...ஆ!..."

"ஐயா! என் உயிர் உடலை விட்டுப் பிரிந்தாலும் என்னை விட்டு உங்கள் கடிதம் பிரியாது!..."

கிங்-செளவுக்கு எங்கிருந்துதான் அந்த தைரியம் வந்ததோ தெரியவில்லை. மறுகணம் கடிதம் கை மாறியது! ஆனால் அந்தக் கடிதத்தைத் தரும் போது அந்த அடையாளம் தெரியாத மனிதரின் கரங்கள் ஏன் அப்படி நடுங்கின? கடமை நிறைவேற்றப்படுமா என்ற கவலைபோலும்!

ஆனால் கடிதம் கையில் கிடைத்ததுதான் தாமதம்; கிங்-செள மறுகணமே ஓடத் துவங்கிவிட்டான்!

"தம்பி!...நீ ஏற்றிருக்கும் பணி உன் நாட்டின் மானத்தை

[தொடர்ச்சி பக்கம்—10]



ஆர். எஸ். கண்ணன்; அயன்புரம்

(?) இந்தி மொழியில் உள்ள பழைய இலக்கியம் என்ன?

துள்சிதாஸ் எழுதிய ராமாயணம்தான்! அதை அவர் பாடிய வரலாறு தெரியுமா?

வால்மீகியின் வடமொழியின் நூலைத் தழுவி கம்பர் தமிழில் ராமாயணம் பாடினரல்லவா? அதை ஒரு பண்டிதர் காசியில் பாடிக் கொண்டிருந்தாராம். அதைக் கேட்ட பிறகுதான் துளசிதாசர் தனது இராமாயணத்தை இயற்றினாராம்!

எம். எஸ். முத்தாலிபு; சுன்னாகம்—இலங்கை

(?) அமெரிக்காவிலிருந்து திரும்பியிருக்கும் கிருஷ்ணமாச்சாரியார், "நான் எதையும் எதிர் பார்க்கவில்லை; அதனால் நான் ஏமாறவில்லை"—என்று கூறியிருக்கிறாரே; அது பற்றி உங்கள் கருத்து என்ன?

சின்ன வயதில் "சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும்!" — என்ற கதையைப் படித்திருப்பாரல்லவா; அதனால்தான் ஞாபகசக்தியோடு அவர் பேசியிருக்கிறார்!

டி. கே. பாலசுப்ரமணியன்; நரசிங்கன்பேட்டை

(?) தஞ்சையில் நடக்கும் திராவிடர் கழக மாநாட்டை சினிமாப் படமாக எடுக்கப் போகிறார்களாமே?

ஆமாம்; சினிமா ஒழிப்புக்கு இதுவும் ஒரு திட்டம் போலும்!

சி. பி. எஸ். மோகனசுந்தரம்; கோச்சின் ஹார்பர்

(?) 'காமராசர்தான் எனது அரசியல் தந்தை'—என்று அமைச்சர் கக்கன் கூறியிருக்கிறாரே...?

இதில் தவறென்ன; 'எஜமான விசுவாச'த்தை வேறு எப்படித்தான் காட்டிக் கொள்வது?

கே. கே. தீனதயாளன்; சிங்கபெருமாள்கோயில்

(?) பண்டித நேரு ஏன் தானே அமெரிக்காவுக்குச் செல்லாமல்; டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அனுப்பி வைத்தார்?

பழைய கால அரசர்களிடம் 'உண்டு காட்டி' என்று சிலர் இருப்பார்கள். அரசர்கள் சாப்பிடுவதற்கு முன்பு இந்த 'உண்டு காட்டி'களுக்குத்தான் உணவு பரிமாறப்படும்! உணவில் விஷம் கலந்திருக்கிறதா என்பதைச் சோதிக்க இந்த வழக்கத்தைக் கைக் கொண்டார்கள்!

அதைப்போலவேதான் பண்டிதரும் கிருஷ்ணமாச்சாரியாரை 'உண்டு காட்டி'யாக அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துத் தான் தப்பித்துக் கொண்டார்!

பாவம்; அங்கேயோ நமது 'உண்டு காட்டி'க்கு எட்டிக் காயை பரிமாறி விட்டார்கள், அமெரிக்கர்கள்!

கே. டி. எஸ். முருகையன்; ஜோகூர் பாரு—மலேயா

(?) சென்னையில் யாருக்கும் சுலபத்தில் தென்படாத செயற்கைச் சந்திரன் அமைச்சர் கக்கனுக்கு மட்டும் எப்படித் தென்பட்டது?

காமராசரது அந்தரங்கத்தையே தெரிந்து வைத்திருக்கும் அவருக்கு செயற்கைச் சந்திரன் தெரிந்ததில் வியப்பொன்றும் இல்லையே!

வெங்கடகிருட்டினன்; ஜெயங்கொண்டான்

(?) பாகிஸ்தான் அரசியல் ஏன் இப்படிக் குழம்பிக் கிடக்கிறது?

ஆமை புகுந்த வீடு உருப்படாது; அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்கள் புகுந்த நாடும் அப்படித்தான்!

சி. ஏழுமலை; புதுப்பேட்டை

(?) திடீரென்று அமெரிக்கா உதவியளிக்க முன்வந்தால்...?

திருக்குறள் வகுப்பு

மணவழகர் மன்றத்தின் சார்பில், பெத்துநாயக்கன் பேட்டை, முருகேச முதலித் தெரு, 2-ம் எண்ணுள்ள இல்லத்தில், ஒவ்வொரு புதன் கிழமை மாலை 6-30 மணிக்குத் "திருக்குறள் வகுப்பு" புலவர் கா. சி. தனக்கோட்டி அவர்களால் நடத்தப்படுகின்றது. அனைவரும் வந்து பயனடையுமாறு வேண்டுகிறோம். [பெண்களுக்குத் தனி இடமுண்டு.]

இங்ஙனம்,
மணவழகர் மன்றத்தினர்.

அது அடுத்த தேர்தலுக்கு கிருஷ்ணமாச்சாரியாருக்கு உதவி அளித்ததுபோலவும் இருக்கும்!

பீதாம்பரம்; தோப்புத்துறை

(?) சென்னையின் புதிய கவர்னர் யாராக இருக்கலாம்?

தேர்தலில் தோற்றுப்போனவர்களுடைய பட்டியலை இப்போதுதான் பரிசீலனைசெய்து கொண்டிருக்கிறார்கள்; அது முடியும்வரை பொறுத்திருங்கள், தோழரே!

கன்னிக்குமரன்; திருப்பதி

(?) உலகம் ஒரு நாடக மேடை என்கிறார்களே; அப்படியானால் வாழ்க்கை...?

கற்பனை செய்து கொண்டேயிருப்பவர்களுக்கு வாழ்க்கை இன்பக்காட்சிகளாக இருக்கிறது; ஆனால் அனுபவிப்பவர்களுக்கோ சோகக் காட்சிகளாகத் தோன்றும்!

பி. எஸ். இருதயராஜ், மோகன்; பிட்சாண்டார் கோயில்

(?) செவ்வாய்க் கிரகத்தில் மக்கள் குடியேறத் துவங்குகிற காலம் வருகிறபோது யாருக்கு முதன் முதலாக அழைப்பு கிடைக்கும்?

கல் எடுத்து கரம்பு நிலத்தை வளம் கொழிக்கும் செழிப்புள்ள பூமியாக மாற்ற முதல் அழைப்பு தமிழினத்திற்கு மட்டுமே கிடைத்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை, தோழரே!

துரோணரின் துரோகம்...!

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

...ஐயோ கண்ணே! ஏகலவ்யா! (ஏகலவ்யனை மார்போடு அணைத்துக் கொள்கிறார்.)

துரோணர்: என்னை சபித்து விடு! உன்னுடைய சாபத்தை நான் தலை வணங்கி ஏற்றுக் கொள்கிறேன்! என்னுடைய செயலுக்கு எந்த சாபமும் அற்பமானதுதான்! ஏகலவ்யா! நான் பெரிய குற்றம் செய்து விட்டேன்!....

பீல் சர்தார்: ஏகலவ்யா! ஏன் கண்ணே இப்படிச் செய்தாய்? இவ்வளவு நாள் நீ பட்டபாடெல்லாம் பயனற்றுப் போய் விட்டதே! கட்டை விரலைக் கேட்ட கயவர்களைக் கொல்லக்கூட உனக்குக் கட்டை விரல் கிடையாதே!

ஏகலவ்யன்: அப்படியெல்லாம் கூறாதே தாத்தா! இது அவருடைய வெகுமதிதான்! அவருடைய பாதார விந்தங்களை அடைந்து விட்டது! அதற்காகவா வருத்தப்படுவது? அவருடைய கருணை இருந்தால் இடது கைக் கட்டை விரலே போதுமானது!

துரோணர்: ஏகலவ்யா! உன்னுடைய பக்திக்கு முன்னால் நான் வணங்குகிறேன்! (மண்டியிட்டு கண்ணீர் விடுகிறார்.) பீல் சர்தார்! இந்த துரோணனை மன்னித் தருள மாட்டாயா?

பீல் சர்தார்: போ! துரோணா, போ!...நான் மன்னிக்கவும் செய்கிறேன்! ஆனால், (ஆகாயத்தைக் காட்டி) 'அவன்' எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தானிருக்கிறான்! நான் என்ன சொல்வேன்?.... கண்ணே! நீ வாப்பா! போய் இதன்மீது ஏதாவது மருந்து போடுவோம்! (ஏகலவ்யனை இழுத்துச் செல்கிறார்.)

(எல்லோரும் அமைதியாக இருக்கிறார்கள்.)

துரோணர்: ஆம்; சர்தார்! கடவுள் நிச்சயம் நீதி வழங்குவார்!...தண்டனையும் வழங்குவார்! அர்ச்சுனா! நாம் உயர்ந்த சாதியினரல்லவா?! ஹா...ஹ...ஹா...

[திரை விழுகிறது.]

—"இன்பபுரியான்"

[இந்தி மூலத்திலிருந்து]

★★★

ஈடிணையற்ற இலக்கிய முத்துக்கள்
சேர்த்துக் கோர்த்த
முத்தாரம்
நவம்பர் முதல் வாரம்
கிடைக்கும்!

விற்பனையாகின்றன!
அறிஞர் அண்ணாவின்
அறப்போர்
விலை ரூ. 1—00
நாவலர் நெடுஞ்செழியன் தீட்டிய
மொழிப் போராட்டம்
விலை ரூ. 1—00
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் :: திருச்சி—2

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை.